# விதை

கவிஞர் ந.ப.கங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை

கவிதைத் தொகுப்பு

கவிஞர் ந.ப.காங்கா

வெளியீடு
**நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்**
நாவற்காடு, வரணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | விதை |
| நூலின் வகை | : | கவிதை |
| நூலாசிரியர் | : | கவிஞர் ந.ப.கங்கா |
| வெளியீடு | : | நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்<br>நாவற்காடு, வரணி,<br>வெளியீட்டு வரிசை: 08<br>தொடர்பு: +94 77 3376 249<br>reeds.wwlg@gmail.com |
| பக்கங்கள் | : | XX + 71 |
| பிரதிகள் | : | 500 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| அட்டைப்படம் | : | உயிரோவியன் |
| பக்க வடிவமைப்பு | : | எஸ்.விஜய் |
| முதற்பதிப்பு | : | 2020, மார்ச் |
| தொடர்பு | : | ஜெயந்தி நகர், கிளிநொச்சி.<br>077 0591569 |
| அச்சகம் | : | விஜய் அச்சுப் பதிப்பகம்,<br>077 9009491 / 024 2225799 |
| ISBN | : | 978-955-71920-8-6 |
| விலை | : | 300/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பெற்றோருக்கு....

**சமர்ப்பணம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்தின் வெளியீடுகள்

1. அசையும் நாணல்கள் - தொகுப்பு நூல், 2018
   (நாவலூரான் வ.ஜசிந்தன்)
2. பகலில் காணும் கனவுகள் - கவிதை நூல், 2018
   (கவிஞர் வடவரணி சி.சபா)
3. அந்தமிழ் அறுபது - கவிதை நூல், 2019
   (கவிஞர் நிர்மலா சிவராசசிங்கம்)
4. புலத்தின் கனவுகள் - கவிதை நூல், 2019
   (கவிஞர் அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன்)
5. குளிர்விடும் மூச்சு - கவிதை நூல், 2019
   (கவிஞர் அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன்)
6. ஓவியமும் சிற்பமும் - கட்டுரைகள், 2019
   (கலாபூஷணம் வடவரணி சி.சபா)
7. மரணிக்கும் மண்வாசனை - சிறுகதைகள், 2019
   (கலாபூஷணம் வடவரணி சி.சபா)
8. விதை - புதுக்கவிதை, 2020
   (கவிஞர் ந.ப.கங்கா)
9. சமனிலைக்கரகம் - ஆய்வு நூல், பதிப்பில்...
   (எழுத்தாளர் யோகநாதன் துஷாந்தினி)
10. கவி இலக்கணம் அறிவோம் - இலக்கண நூல், பதிப்பில்...
    (வெண்பா வேந்தர் அனுராதா கட்டப்பொம்மன்)

கலைஞர்களை ஊக்குவிப்போம்
கலைகளுக்கு உயிர் கொடுப்போம்

**நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்**

நாவற்காடு, வரணி, இலங்கை.

தொ.இல: 077 3376249



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



கவிஞர் ந.ப.கங்கா என்ற பெயருக்குள் தன்னைச் சுருக்கிக்கொண்டு கவிதையுலகில் பவனி வருகின்ற பகீரதன் கங்காஜினி என்ற படைப்பாளி கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் முகாமைத்துவ உதவியாளராகப் பணி புரிபவர். கவிதாஜினிக்கு பதினொரு வயதில் ஏற்பட்ட ஆர்வம் பருவங்கள் பல கடந்த நிலையில் இப்போது விதையாக விதைக்கப்படுகின்றது. இலக்கிய முயற்சிகளில் ஆர்வத்துடன் பணியாற்றுகின்ற வரணி நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்தினர் இக் கவிதைத் தொகுதியை வெளியிடத் துடித்து நிற்கின்றனர். கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டாமே என்ற நிலையில் இக் கவிதைத் தொகுதியை எடுத்த எடுப்பிலேயே படித்து முடித்து விடுவதில் எனக்கேற்பட்ட ஆர்வத்தின் வெளிப்பாடாக உங்களோடு சில வார்த்தைகளைப் பகிர்ந்து கொள் கின்றேன்.

இளமைக்காலக் கனவுகள் பலருக்கு விபரீதமாகவே அமைந்து விடுவதுண்டு. ஆனால் இவள் வாழ்ந்த சூழல் வித்தியாசமானது. மனிதக்குருதி அவலமாய் மண்ணில் சிந்த, இரத்தமும் சதையுமாக மனித உடல்கள் மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைக்கப்பட்ட சூழலில் இவள் உயிர்வாழ்ந்து இருக்கின்றாள். தன்மான வித்துக்கள் விதைக்கப்பட்ட மண்ணில் தன்மானத்தை இழந்த மனிதர்களாக மக்கள் மாறிக் கொண்டிருப்பதை எப்படி அனுமதிக்க முடியும் என்ற வினாவே கவிதாயினியின் சிந்தையைத் தூண்டியிருக்கின்றது. உலகம் போற்றும் உயர்ந்த பண்பாட்டிற்கு உரித்தானவர்கள், மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவிரிமானை ஒத்த மானமுடையவர்கள் வெறும் உயிருக்காகவும் உடமைகளுக்காகவும் மானமிழந்து நெறி கெட்டு வாழ்வதைக் கண்டு துயரம் பொறுக்காது வேதனையில் வெளியிட்ட வார்த்தைகளாகவே இக் கவிதை வரிகளைக் காண முடிகின்றது. உண்மையில் இந்தச் சமுதாயத்தை எப்படியாவது காப்பாற்ற முடியாதா? என்ற ஏக்கமும், அந்த ஏக்கத்தின் விளைவுமே இக்கவிதை வரிகள், இவை கவிதைகளல்ல அவளின் உள்ளக் குமுறலின் வார்த்தை வெளிப்பாடுகள்.

கவிதாஜினி தோல்வியைக் கண்டு துவண்டு போகாதவர் வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் நிரந்தரமான வையல்ல என்ற உண்மையை உணர்ந்தவள் அதனால் தான் சுழலும் சூறாவளியாக வாழ்க்கைப் போக்கினைக் காண்கின்றாள்.

"சுழலும் சூறாவளியாய் வாழ்க்கைப் போராட்டம்
கனன்று கருகி சிதைந்து போகினும்
விரும்பி நாமும் துணிந்து நிற்கையில்
பகையும் விலகும் வெற்றியும் கனியும்,"

என்பது அவளின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையுடன் தான் அவள் சமூகத்தைப் பார்க்கின்றாள். பகட்டான வாழ்வுக்காகப் பணத்தைத் தேடி, ஊரை உறவுகளைத் தொலைத்து, தாமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமைப்பட்டுத் தமது அடையாளத்தை இழந்து நிற்பவர்களைக் கண்ட ஏக்கம் இவரது உடைந்த உறவுகள் என்ற கவிதையின் உட்பொருளாய்த் தெரிகின்றது. குடிசை வாழ்வாக இருந்தாலும் கூட்டுக் குடும்பங்களிலும் கிராமங்களிலும் இருந்த மகிழ்ச்சியை இன்று தொலைத்து கணவன் மனைவி இருவரும் உழைத்தாலேயே வாழலாம். என்ற நிலையில் குழந்தைகளைப் பிள்ளைக் காப்பகங்களில் தவிக்க விடுகின்ற இழி நிலையைப் "பாசம் தேடும் பந்தங்கள்" என்ற கவிதையில் எடுத்துக் காட்டுகின்றார். தாய்ப்பாசத்திற்காக ஏங்கித் தவிக்கும் இந்த மனிதக் குழந்தைகள் வளர்ந்து வரும்போது பாசம் என்றால் என்ன என்பதை அறியாத இயந்திர மனிதர்களாகவே மாறி வருகின்ற அபாயமும் ஊர் உறவுகளிடமிருந்து அந்நியப்படுகின்ற அவல நிலையும் சமூக அக்கறையுள்ள வர்களின் நெஞ்சில் வலியை ஏற்படுத்தவே செய்கின்றன. பணத்துக்காக எல்லாவற்றையும் இழந்துவிடத் துடிக்கும் மனோ நிலையில் இருந்து எமது மக்கள் மீண்டு வரும் நிலையிலேயே எமது சமூகம் மீண்டும் உயிர் பெற்று வாழ முடியும் என்பது இவரது எதிர்பார்ப்பு.

இன்று எண்ணிக்கையடிப்படையில் பெண்களே சமூகத்தில் அதிகமானவர்களாக இருந்தாலும் இந்த அதிகரிப்பும் பெரும்பான்மைப் பலமும் அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்து விடவில்லை. அவர்கள் வீட்டில் கூலியில்லா உழைப்பாளியாகவும் வெளியே கூலித்தொழிலாளியாகவும் தினமும் தன்னை அழித்துக்கொண்டாலும் அவள் ஆணுக்கு அடிமைப்பட்டவளாகவே வாழும் அவல நிலையே காணப்படுகின்றது. அந்த அவல நிலையைக் கண்டு கவிதாஜினி ஆத்திரப்படுகின்றாள் "அனல் கக்கும் கண்கள்" என்ற கவிலதயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாய்பொத்திப் பெண்ணை அடக்க நினைக்கும்
வன்முறையாளனே..."

என ஆண்களைக் கூவியழைத்து "நினைவில் கொள் பெண் என்றுமே பெரு நெருப்பே" என்று ஆண்களை எச்சரிக்கின்றாள். இந்த எச்சரிப்பு அவள் வாழ்ந்த சூழலில் அவள் பெற்றுக் கொண்ட மன வைராக்கியத்தின் வெளிப்பாடு.

"புதிதாய் ஒரு விதி செய்வோம்" எனும் தலைப்பில் சமூகத்திலுள்ள சீர்கேடுகள் பலவற்றையும் சுட்டிக் காட்டி அவை இல்லாத புதியதொரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தைப் பதிவு செய்கின்றார். கஞ்சா, கசிப்பு, வஞ்சனை, களவு, வாள் வெட்டு, பஞ்சணை வெறி, சீதனம், கொடும் பஞ்சம், கைமையின் கொடுமை எனப் பலதரப்பட்ட சமூகக் கொடுமைகளையும் அனுபவித்துக் கொண்டு வாழ்கின்ற வாழ்வின் அவலத்தைப் போக்கிப் புதியதொரு வாழ்வை உருவாக்க இவர் துடித்து நிற்கின்றார்.

"ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற நிலைமாறி"
ஓரிடத்திற்கொருத்தி...

என்ற அவல நிலைக்கு எமது சமூகம் சென்று விட்டதைக் காணப் பொறுக்காது எமது உயர்ந்த பண்பாட்டை எண்ணி ஏங்குகின்றார். கவிஞர் கவிதாஜினி.

துணுக்குகளாய், சற்று விரிந்தவைகளாய் அமைந்த கவிதைகளைக் கடந்து செல்லும் போது வட இலங்கையில் ஏற்பட்ட யுத்தச் சூழலின் வாசம் தென்படுகின்றது.

"விடுதலை உணர்வு மறந்து
அகதியாய் பயணம் தொடர்ந்த..." வரலாற்றை

எடுத்துக்கூற முற்படும் "வேர்களின் துளிர்ப்பு" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையில் பதுங்கு குழிக்குள் சுவாசிக்க முடியாமல் தவித்ததையும் குண்டு மழை பொழிந்து காற்றில் கந்தக நெடி பரவிச் சுவாசத்தை நெருடியதையும் மரணித்துப் போன வர்கள் போக எஞ்சியவர்களுடன் வாழ்ந்த அவலத்தையும் எடுத்துக் காட்டியவர் அந்த வாழ்வின் மறுபக்கத்தில் களவும், சூதும், கஞ்சாவும், நீலப் படமும் கால் பதித்திருக்கும் கொடுமையை எடுத்துக் காட்டுகின்றார். வீரமும் நன்னெறியும் நிறைந்த மண்ணிலே வீரர்களாக தன்மானத் தமிழர்களாக வாழ்ந்தவர்கள். தரங்குன்றித் தாழ்ந்து போன வாழ்வின் அவலத்தை வேதனையோடு வெளிப்படுத்துகின்றார்.

பொதுவாக கவிதாயினியின் வார்த்தைகளில், சிறப்போடு வாழ்ந்த வாழ்வை இழந்த ஏக்கம், தன்மானத்தோடு தலை நிமிர்ந்து வாழ்ந்தார்கள் இன்று பிறர் நகைக்க வாழ்கின்ற வாழ்வை எண்ணி அடைகின்ற வேதனை, சுதந்திரப் பறவைகளாய் சுற்றி வந்த பெண்கள் இன்று சமூகத்தில் அனுபவிக்கும் கொடுமைகள், முதலியவற்றை எண்ணி மீண்டும் எமது வாழ்வு மலராதா என்று ஏங்கித் தவிக்கின்ற நிலையினையே காட்டுகின்றன. கவிதாஜினி! உள்ளம் தளர்ந்து விடாதே. நம்பிக்கையோடு நாட்களை நகர்த்து உனது எண்ணங்கள் ஈடேறவும், வார்த்தைகள் வலுப்பெறவும் எனது வாழ்த்துக்கள்.

27/01/2009

Prof.Dr.M.Ragunathan
Head & Senior Professor in Tamil
Department of Tamil
University of Jaffna
Jaffna, Srilanka,

**சிரேஷ்ட பேராசிரியர் ம. இரகுநாதன்**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை விருட்சமாக வாழ்த்துகிறேன்



விதை என்னும் கன்னிக் கவிதை தொகுப்புடன் இலக்கிய உலகிற்கு பிரவேசிக்கும் கங்காவின் இலக்கியப் பயணம் நீண்ட நெடிய தூரம் பயணிக்கும் என்பதனை அவரது எழுத்தாற்றல் வெளிப்படுத்தி நிற்கிறது. சிறுவயதில் இருந்தே இலக்கியத் தேடல் மிக்கவராக இருந்த படைப்பாளியின் கவிவரிகளினூடாக அவரது ஆளுமையும், சமூகத்தின் மீது கொண்ட அக்கறையும், நேரிய பார்வையும் புலப்பட்டு நிற்கிறது. எமது மரபின் இருப்பினை தக்க வைக்க வேண்டும் என்ற பேரவா இவரது படைப்புக்களினூடாக வெளிக்கிளம்பு வதுடன் தாய் மொழி மீது கொண்ட பற்றுறுதி, பெண்ணியம் தொடர்பான விழிப்பு, உறவுகள் மீதான தெளிவான பார்வை போன்ற பல்வேறுபட்ட விரிந்த சிந்தனையும் சமூக அக்கறையும் பிரவாகிக்கின்றது.

கங்காவின் இலக்கியப் பயணம் இலக்கிய உலகில் தடம் பதிக்கும் என்பதனை கங்கணம் கட்டி நிற்பதாக இத் தொகுப்பு அமைகிறது. சமூக வாழ்வியலை தத்துருவமாக பார்க்கின்ற பார்வை சிறப்பாக அமையப்பெற்றுள்ளது. ஆளுமை மிக்க படைப்புடன் வருகின்ற படைப்பாளியின் படைப்பாற்றல் மேலும் பல தடங்களை இலக்கிய உலகிலே பதிக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறை பரம்பொருளை வேண்டி வாழ்த்துவதுடன் இலக்கிய ஆர்வலர்கள் பலரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புக்கள் ஊடாக பிரசவிக்க வைக்கின்ற "நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்திற்கு" வாழ்த்துக்களை தெரிவுத்துக்கொள்கிறேன்.

**திரு தி.கார்த்திகேயன்**
கலாசார உத்தியோகத்தர்,
கரைச்சி பிரதேச செயலகம்,
கிளிநொச்சி.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் வாழ்த்துரை



இறைவன் மனிதனுக்கு அறிவைக்கொடுத்துள்ளான். இந்த அறிவை மென்மேலும் பொன்னான அறிவாக மலரச் செய்வது அவரவர் மனங்களிலும் ஊக்கங்களிலும் தான் இருக்கிறது என்பதற்கமைய பள்ளிக்காலத்திலே தன்னம்பிக்கையும் தளராத மனமும் ஊக்கமும் கொண்ட கங்கா, இன்று கவிதைத் தொகுப்பு ஒன்றை ஆக்கியுள்ளார். அவரின் இந்த முயற்சியை வரவேற்பதுடன் கவிதைத் தொகுப்பானது மென்மேலும் பல விழுதுகள் விட்டு பெருவிருட்சமாக தழைத்தோங்க எனது இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி நாகலிங்கம் ரஞ்சினிதேவி**
(ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர்)
கிளி/அக்கராயன் ம.வி,
கிளிநொச்சி.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



எழுத்தாற்றல் என்பது மனித அறிவின் கூறாக, பேறாக முதன்மை பெறுகின்றது. எழுத்தாற்றல் அற்ற மனிதனால் தனது எண்ணங்களையும் கருத்துக்களையும் மிகத் தெளிவாக மற்றவர்களுக்கு புரிய வைக்க முடியாது. தோழி கங்காவின் "விதை" கவிதை பனுவலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமையும் மகிழ்வும் அடைகின் றேன். இவள் எனது பாடசாலைப் பருவ பள்ளித் தோழியும் எனது நெருங்கிய நண்பியுமாவாள். கவிதை, கட்டுரை போன்றவற்றில் அதீத ஈடுபாடு உடையவள். பாடசாலைகளில் ஓய்வு நேரங்களில் கவிதைகள் எழுதி எப்போதும் தன்னோடு வைத்திருப்பவள் சில கவிதைகள் ஈழநாதம், வெள்ளிநாதம், தினக்குரல் போன்ற பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன.

தனது கவிதையை ஆவணப்படுத்தி கவிதைப்புத்தகமாக வெளியிட வேண்டும் என்கிற ஆசை இவள் மனதில் எப்போதும் காணப்பட்டது. ஆனாலும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை, மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக தனது திறமைகளை வெளிக்கொண்டு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் தனது கவி வரிகளுக்கு புத்துயிர் கொடுக்கும் முகமாகவும் கவிதை மீதான தளராத காதலினாலும் எழுத்தாற்றல் மூலமாக இலக்கிய பரப்பில் கால் பதித்துள்ள இவள் பல வருடங்களாக தன் உணர்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியான கவிதைகளை தொகுத்து விதையாக்கியுள்ளார். விதை விருட்சமாகி செழிக்க வேண்டும். கங்காவின் இலக்கியப் பணி தொடர்ந்து குன்றின் மேலிட்ட தீபமாக பிரகாசிக்க வேண்டும். அவரது பெற்றோரும், அவள் கல்வி பயின்ற பாடசாலைகளும் அவள் பிறந்த மண்ணும் பெருமை கொள்ள இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**திருமதி பேனாட் சிந்துஜா** (நண்பி)
வளவாளர்,
அபினா கலைக்கல்லூரி.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



சிறு வயதிலிருந்து கட்டுரை, கவிதை எழுதுவதில் வாசிப்பதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தேன். அந்தக் காலகட்டத்தில் இனவிடுதலை, மாவீரர் நாள், போராட்டம், பெண் எழுச்சி போன்ற கவிதைகளையே தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருந்தேன். நான் வளர்ந்த சூழல் அவ்வாறானதாகவே அமைந்திருந்தது. எனது பதினொரு வயதிலிலே கவிதை எழுதத் தொடங்கினேன். பதின்நான்கு வயதில் கவிதை நூல் நானும் தயாரிக்க வேண்டும் என்ற பேராசை மனதில் எழுந்து பதிந்துபோனது. நான் எழுதிய கவிதைகளை நானே தையல்ஊசி நூல் கொண்டு தைத்து சின்ன புத்தகமாக்கி வைத்து மகிழ்ந்திருந்தேன். அக்காலகட்டத்தில் தொடர்ச்சியான பல இடப்பெயர்வு, வீட்டிலே சாப்பாடிற்கே அல்லல்படும் ஏழ்மை, என் எழுதும் ஆவல் நின்று போவதற்கான காரணிகளாக அமைந்துவிட்டன.

மீண்டும் 23 வயதிலே நான் எழுதிய கவிதைகளை A4 தாள் வாங்கி அதிலே அழகாக எழுதி நானே புத்தக வடிவில் கட்டி என்னுடன் வைத்து தினம் வாசித்து மகிழ்ந்தேன். பின் 2008 இடப்பெயர்வில் எல்லாம் கைவிட்டுப்போனது. 2008 தொடக்கம் 2018 வரை பத்து வருடங்கள் வேலை, குடும்பம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளை கவனித்தல் என எனது வாழ்க்கை திசைமாறியது. எனினும் அவ்வப்போது மனதுள் எழும் சிலவிடயங்களை வரிகளாக்கி எழுதி வந்தேன். தற்போது முகநூல் வழியாக பலகவிதைக் குழுமங்கள் செயற்படு வதால் அங்கே கவிதைகளை எழுத தொடங்கினேன். அந்தவகையில் எழுத தொடங்கியதும் என்னுள் உறைந்து போயிருந்த "கவிதை நூல் வெளியிட வேண்டும்" என்ற ஆவல் முளைவிடத் தொடங்கியது.

கவிதை நூல் வெளியிடக் கூடிய அளவில் மிகச்சிறந்த கவிதையாக எனது கவிதைகள் இல்லாதவிடத்தும் என்னை நானே ஊக்குவிக்கும் முகமாக என் இந்த முயற்சியை எடுத்துள்ளேன். இதனை வாசகர்களாக தாங்கள் அனை வரும் வாசித்து தங்கள் கருத்துக்களை, விமர்சனங்களை, வழிகாட்டலை என்னுடன் பகிர்வதன் மூலம் என்னை இத்துறையில் வளரச்செய்யவேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

அந்தவகையில் என் கன்னிப்படைப்பான இன்நூலிற்கு "விதை" எனப் பெயரிடுகின்றேன். ஏனெனில் விதை முளைத்து விருட்சமாகி காய்த்து கனிபடைக்க வேண்டும் என்ற பேரவாவினால் ஆகும். சிறுகுழந்தை அ.ஆ,இ எழுதிப் பழகுவதுபோல் நான் படைத்த இந்நூலினை மனம் தவித்து பதற்றத்துடனே வெளியிடுகிறேன். வாசிக்கும் தாங்களின் கருத்துக்களுடாக என் பயணம் சிறப்பாகத் தொடரும் என நம்புகின்றேன்.

மேலும் என்னை இந்நூலினை வெளியீடு செய்ய எனக்கு ஊக்கமும் உதவியும் வழிகாட்டலும் செய்து முழு துணையாக நின்ற நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத்தின் தலைவர் திரு.வ.ஜசிந்தன் அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இக்கவிதை நூலினை ஆய்ந்து திருத்தம் செய்து அணிந்துரை வழங்கிய சிரேஸ்ட பேராசிரியர் ம. இரகுநாதன் ஐயா அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய நண்பி திருமதி பே.சிந்துயா, ஆசிரியர் செல்வி நா. ரஞ்சினி தேவி, கலாசார உத்தியோகத்தர் திரு தி. கார்த்திகேயன் அவர்களுக்கும் நிதி அனுசரணை வழங்கிய திரு ஐ.கமலநாதன் மற்றும் இந்நூலினை அழகாக வடிவமைத்த விஜய் பதிப்பகத்தின ருக்கும் அகம் நிறை நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ந.ப.கங்கா**
(பகீரதன் கங்காஜினி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| சுழலும் சூறாவளி | 01 |
| உடைந்த உறவுகள் | 01 |
| கிராமத்து வாழ்க்கை | 02 |
| இயற்கை உணவை விரும்பு | 02 |
| பாசம் தேடும் பந்தங்கள் | 03 |
| முத்துச் சிதறல் | 03 |
| தங்கத் தமிழ் | 04 |
| கவியே நீயே என் தேடல் | 04 |
| சொல்லாதே யாரும் கேட்டால் | 05 |
| உன்னுள் நான் என்னுள் நீ | 05 |
| மேகத்தைத் தூது விட்டு | 06 |
| எங்கோ தொலைந்த மனது | 06 |
| தூது சொல்ல வந்த கிளியே | 07 |
| கனவுகள் ஊர்வலம் | 08 |
| விழியோடு ஒரு வினா | 08 |
| முதல் நேசம் | 09 |
| காதல் கசக்குதடி | 09 |
| பூவே | 10 |
| தாய்மை | 10 |
| மனசே அழகு | 11 |
| தோல்வி என்பது முடிவல்ல | 11 |
| நீ நான் நெருப்பு | 12 |
| வானவில் | 12 |
| மலரே உனக்காக | 12 |
| தலையணை | 13 |
| சம்மதம் | 13 |
| ஏழை | 13 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| தாமரையின் புலம்பல் | 14 |
| முகமூடி | 14 |
| மழலை | 15 |
| தூது சொல்லாயோ தோழி | 15 |
| புதிதாய் ஒரு விதி செய்வோம் | 16 |
| விழித்தெழு தமிழா | 17 |
| ஒடுக்கப்பட்ட இனம் | 18 |
| எமது தேடல் | 19 |
| ஊஞ்சல் வாழ்க்கை | 20 |
| செவ்வாயில் நாங்கள் | 21 |
| துரோகம் | 22 |
| மனங்களின் மாற்றம் | 23 |
| மாலை நேரம் | 24 |
| உனக்காகவே நான் வாழ்கின்றேன் | 25 |
| அவசர உலகம் | 26 |
| பய(ண)ம் | 27 |
| அம்புலன்ஸ் கடவுள் | 28 |
| என் பாதை | 30 |
| பேரின்ப வரம் | 31 |
| மௌனித்து அழும் இராப்பொழுதுகள் | 32 |
| பெண்களின் வரமா | 33 |
| அனல் கக்கும் கண்கள் | 34 |
| வெற்றுக் காகிதங்கள் | 35 |
| காத்திருப்பு | 36 |
| முதுமையின் புலம்பலொன்று | 37 |
| தமிழன் பெருமை | 39 |
| வருவேன் அண்ணன் உனக்காவே | 40 |
| இரட்டைமுகம் | 42 |
| வேர்களில் துளிர்ப்பு | 43 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அம்மா ஏனம்மா | 44 |
| எரிமலையும் சிறுபொடியே | 46 |
| கனவுச் சிறகு | 47 |
| தாய்மை | 49 |
| நாகரீக மாயை | 50 |
| பொய்த்துப் போன பருவம் | 52 |
| கால மாற்றம் | 53 |
| அந்தக் காலம் இனியும் வருமா? | 54 |
| என் உலகம் | 56 |
| நான் வித்தியா பேசுகின்றேன் | 58 |
| என் இறப்பின் பின் | 60 |
| பொன்விழா நாயகி | 61 |
| இப்படியும் பெண்மையோ | 65 |
| அவள்கள் | 67 |
| என்னைத் தேடுகின்றேன் | 69 |
| விதை | 70 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுழலும் சூறாவளி

துயரமும் வறுமையும் சுத்தி அடிக்கும்
பொய்மையும் வாய்மையும் வெற்றிக்காய்த் துடிக்கும்
மருந்தும் மாயையும் மயங்கி நிற்கும்
அறமும் மறமும் துவண்டு மடியும்
சுழலும் சூறாவளியாய் வாழ்க்கைப் போராட்டம்
கனன்று கருகி சிதைந்து போகினும்
விரும்பி நாமும் துணிந்து நிற்கையில்
பகையும் விலகும் வெற்றியும் கனியும்

❖ ❖ ❖

## உடைந்த உறவுகள்

பண்பு எல்லைதாண்டி சொல்லிவிட்ட வார்த்தைகள்
எட்டாத தூரமாய் உடைத்துவிடும் உறவை
பகட்டான வாழ்வுக்காய் பணத்தை தேடியே
திகட்டாத சொந்தங்களை தொலைத்திடாதே
ஊரோடு கூடிவாழ சிறக்கும் வாழ்வு
பாரோடு சேர்ந்து பாரு பெருக்கும் அறிவு
வாய்மையும் நேர்மையும் நோக்கியிங்கே
வாழ்வோம் வளமாய் எந்நாளுமே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமத்து வாழ்க்கை

ஆத்தங்கரையோரம் ஆடுதடி மனசு
சேர்த்து வைச்ச ஞாபகங்கள் பறக்குதடி விரிந்து
சேற்று வயலேறி சேர்ந்து வந்த கூட்டம்
தூண்டில் மீன் பிடிக்கும் சிங்காரக் கூட்டம்
கூட்டாஞ் சோறாக்கி சேர்ந்துண்ட சேனைகள்
பாட்டுக்கள் பாடினாலே தோற்குமடி அந்தக் குயிலோசை
இயற்கையின் சுகந்தம் நுகர்ந்து வந்த காலம்
இனிமேலும் எங்கேதான் கிடைக்குமடி கிளியே!!!

❖ ❖ ❖

## இயற்கை உணவை விரும்பு

முருங்கையிலே இருக்கு முறுக்கு
வீணே எதற்கு கஞ்சா உனக்கு
இயற்கையில் இருக்கு பச்சை பல
விரும்பிப் புசித்தால் ஆயுள் பல
இளநீர்ப்பானமும் மஞ்சள் பழங்களும்
காய்கறிக்கீரையும் தானியச் சமையலும்
உண்டே வாழ்ந்தால் அண்டாது நோயே
உணர்ந்து உண்போம் திடமாய் வாழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசம் தேடும் பந்தங்கள்

குடிசை வாழ்விலும் கூட்டுக் குடும்பம்
மாளிகை வீட்டில் மனிதத்தைக் காணோம்
உறவுகளுக்கு இங்கே ஏது பஞ்சம்
உரைத்துக் கூறிடத்தயங்குது வஞ்சம்
குடும்பமே உழைத்தால் வாழலாமெனும் மாயை
குழந்தைகள் ஏங்குது பிள்ளைக் காப்பகத்தில்
பாசம் தேடும் பந்தங்கள் யாவும்
எல்லாம் தொலைத்து காத்திருக்கின்றன!!!

❖ ❖ ❖

## முத்துச் சிதறல்

சத்தமின்றிப் பெய்த சாரல்மழை
முத்துச் சிதறலாய் இலைமேல்
மோகம் கொண்டதுவே
வெட்கப்பட்டு மருகும் பெண்போல நிலமங்கை
குளிர்ந்தாலே குற்றாலமாய்
சின்னப்பொண்ணு சிரித்தாள் மெட்டவிழ்த்து
முத்துமணி நாதமாய் சிதறவிட்டு
கன்னிப்பொண்ணு குளித்தாள் கங்கைக் கரையில்
அவள் மேனியெங்கும் தெறித்தது நீர்த்துளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கத் தமிழ்

உலக மொழியாகி செம்மொழித் தரமாகி
இலக்கணமும் இலக்கியமும் இணையில்லா மொழியுமாகி
மெய்ஞானம் விஞ்ஞானம் போதிக்கும் காப்பியமோடு
தரணியிலே உயர்ந்து நிற்கும் தங்கத் தமிழிதுவே

❖ ❖ ❖

## கவியே நீயே என் தேடல்

கற்பனைகளின் வண்ணமாய் என் கவிகள்
கட்டற்று ஓட எத்தனித்த பொழுதுகளில்
உண்மையின் தாக்கம் மனதை ஊடறுத்தே
உறைந்து விட்ட நெருடலின் வலிகள்
மீண்டும் புதிதாய்ப் பிறக்கின்ற செயலினில்
முயற்சியெனும் கடலில் தத்தளித்துத் தேடுகின்றேன்
மூழ்கியேனும் கரையேறும் ஆசைத்தீயாய்
கவிதையே!!! என் தேடல் நீயே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொல்லாதே யாரும் கேட்டால்

வெற்றுக் காகிதமாய் வெண்ணிலா காத்திருக்கேன்
குற்றமேதும் இதுவரை நான் செய்தறியேன்
கோவில் குளம் ஏறிவிட்டேன்
குமரியாக தினம் உலாப் போகின்றேன்
தூது செல்லும் தென்றலே சொல்லாதே
இவள் முதிர் கன்னியென்றே !!!

❖ ❖ ❖

## உன்னுள் நான் என்னுள் நீ

இதயங்கள் இரண்டாகினும் உணர்வுகள் ஒன்றாகி
உடல்கள் இரண்டாகினும் உயிரது ஒன்றாகி
உன்னுள் நானும் என்னுள் நீயும்
என்றும் வாழ்வோம் இணைபிரியாதே
அன்பே வா!!! அழைத்தேன் உனையே!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேகத்தைத் தூது விட்டு

மேகத்தைத் தூது விட்டேன்
மின்னலென வருவானோ
தேகம் மெலிந்திங்கே
தையல் நான் வாடுகின்றேன்
பார்மேலே பறந்து போகும்
பஞ்சு மென் மேகமே
என்னவன் காதிலே இனிதாய்
என் கதை பொழிந்து விடு
நெஞ்சார உன்னை நம்பி
வஞ்சி நான் காத்திருப்பேன்

❖ ❖ ❖

## எங்கோ தொலைந்த மனது

காந்தவிழிப் பார்வையும்
கன்னக்குழி அழகும்
ஏங்கவைக்கும் உன்னினைவும்
தேடுகின்றேன்
எங்கோ தொலைந்ததென் மனதை!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூது சொல்ல வந்த கிளியே

கொவ்வைப்பழ உதட்டழகி
பச்சை வண்ண பசுங்கிளியே
என்ன சேதி கொண்டு வந்தாய்
எந்தன் மன்னன் என்ன சொன்னான்

வெற்றிவாகை சூடி பகை வேரறுத்தே
கொற்றவனாய் நாடு சேரும் நன்நாளும்
பட்டத்து யானையுடன் பரிவட்டமும் பிடித்தே
கட்டிக்க வாரேன்னு சொன்னாரோ கிளியே

மங்கை என் மனங்குளிர நல்லசேதி சொல் கிளியே
எண்ணங்கள் என் போலே தினம் வாழும்
அவர் உள்ளும் நான் தானே கிளியே
பிரிவுத்துயர் தாங்காமல் உன் பின்னாலே வாறாரோ???

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுகள் ஊர்வலம்

இராக்கால இதய கீதம் இசைக்கின்றது
கற்பனை சிறகினை விரித்து நீள்கின்றது
ஆசைகள் மாலை கோர்த்து தவழ்கின்றது
கனவுகள் ஊர்வலம் கட்டற்று போகின்றதே
விரும்பிய மணாளன் விரல் பிடிக்க
விருந்தினர் எல்லாம் வாழ்த்து உரைக்க
மங்கள வேதம் விண்ணத்தைதொட
மஞ்சள் தாலி கழுத்தில் ஏற
கனவுகள் ஊர்வலம் தினம் காண்கிறேனே
கனவுகள் மெய்ப்பட கவலையும் போகுமே

❖ ❖ ❖

## விழியோடு ஒரு வினா

ஓரவிழிப்பார்வை அழகாலே
என் விழியிரண்டை நேரிழித்து
விழியோடு ஒரு வினாத் தொடுத்தாள்
விடையறியா வாலிபம் வலிக்குதிங்கே
காதல் மொழிபேசி என் வலி தீர்க்க
விடைகொடு உன் விழியாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் நேசம்

இளவேனில் காலத்து முதல் பூ நீ
வசந்தத்தை நுகர வைத்த வாசம் நீ
என்னை எனக்கு அறிமுகம் செய்த முகவரி நீ
என் காதலும் நீ என் உயிரும் நீயே

❖ ❖ ❖

## காதல் கசக்குதடி

கடைக்கண் பார்வையிலே காதல் சொன்னவளே
கனவோடு நாம் கதைபேசும் இரவுகள்
கனநேரம் கடந்து விடியல் ஆனதுவே
பரிமாறிக் கொண்ட பரிசுப் பொருட்கள்
பெட்டிவழி பிதுங்கி எட்டிப் பார்க்கிறதே
கிறுக்கப்பட்ட காதல் கவிதைகள் இன்னும்
கண்ணாடி அடுக்ககுகளில் அழகாய்த் தெரிந்தபடி
காரணம் இன்றியே மறந்து சென்றனையே
நின் நினைவாலே காதல் கசக்குதடி
தினம் நீறு பூத்த நெருப்பாக என்னிதயம் எரியுதடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவே

பூவே மெல்ல இதழ்விரித்த
மாயம் என்ன மந்திரம் என்ன
வர்ணங்களால் அழகு காட்டி
மனம் கொள்ளையிடும் மணம்தான் என்ன
கண்ணுக்கு விருந்தளித்து
காயத்திற்கு மருந்தளித்து
தென்றலிடை வாசம் கூட்டி
தேனமிர்தம் வாரித் தந்து
உயிர் துறப்பாய் ஒருநாளில்

❖ ❖ ❖

## தாய்மை

பஞ்சுக்கால் உதைக்கும் பசுங்கிளியே
உன் பிஞ்சு விரல் பிடிக்க ஆசையடா
எத்தனை வலிசுமந்து பெற்றாலும்
பெண்ணவள் மகத்துவம் என் வரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமே அழகு

இளமையிலே வறுமையில்லா வாழ்வு அழகு
கல்வியிலே பேதமில்லாப் பகிர்வு அழகு
நட்பிலே எதிர்பார்ப்பில்லா அன்பு அழகு
முகத்திலே ஒப்பனையில்லா எளிமை அழகு
இதயத்தே வஞ்சனையில்லா மனமே அழகு

❖ ❖ ❖

## தோல்வி என்பது முடிவல்ல

ஒருநாள் வாழ்க்கை என்றெண்ணி
மொட்டு மலராமல் விட்டதில்லை
சாம்பலில் இருந்து மீண்டும் பிறக்கும்
பீனிக்ஸ் பறவையாய் நாம் எழுவோம்
வெற்றி என்பது முடிந்துவிட்ட இலக்கு
தோல்வி என்பது வெற்றிக்கான தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ நான் நெருப்பு

மௌனமான இரவின் குளிர் போக்க
நீயும் நானும் நெருப்போடு தகித்திருக்க
கண்கள் மட்டும் பேசுதே கனவுகளை

❖ ❖ ❖

## வானவில்

இயற்கையின் அழகை
இறங்கி வந்து
இரசிக்கின்றன - ஏழு
வர்ண தேவதைகள்

❖ ❖ ❖

## மலரே உனக்காக

வாசம் வீசும் வார்த்தைகள் கோர்த்து
வரைகின்றேன் அழகிய காதல் கடிதம்
மலரே உனக்காக மறுக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையணை

சோக வெளிப்பாட்டின்
கண்ணீர்த் துளிகளை
உள்ளிழுத்து இதமாய் வருடி
தூங்க வைப்பதாலோ என்னவோ
பெண்களின் முதல் தோழியும்
உயிர்த் தோழியுமாய் நீ

❖ ❖ ❖

## சம்மதம்

இந்தப் பிரபஞ்சத்தையே வென்றுவிட்டதாய்
வெற்றிக் களிப்பில் மிதக்கிறேன்டி உன்
காதல் சம்மதம் பெற்றுவிட்டதால்

❖ ❖ ❖

## ஏழை

வயிறு பற்றி எரிந்தாலும்
வாய்மை தவறாத
தன்மானம் இழக்காத ஒரு உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாமரையின் புலம்பல்

சேற்றிலே மலர்ந்த செந்தாமரையாய்
நான் வீற்றிருந்த போதும்
சேற்றின் வாடைதான் தினம் மூச்சிட
சேற்றின் குணவியல்பிடையே
கரைசேரா ஓடமாய் நான்

ஒருநாள் வாழ்வெனும் அறிந்து
அந்தக் குலதெய்வச் சந்நிதியில்
எனைப் போட்டுச் செல்லுங்கள்
உங்களின் பக்திக்கே கிடைக்கும் முக்தி

❖ ❖ ❖

## முகமூடி

சூழ்நிலைக்கு ஏற்பச் சூத்திரதாரியின் முகம்
கழன்று விழாமல் கச்சிதமாய் முகமூடி
ஏய்த்து வாழ்வதே கொள்கைக் குணமாய்
மாய்த்துப் போகின்றான் மானிடம் தொலைத்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலை

அழகாய் அசையும் சிறுவிழிகள்
மொட்டு விரிந்தது போல் முத்து உதடுகள்
வார்த்தைகளால் சொல்லிட முடியா
வர்ணஜால கவிமொழியாய் மழலை சந்தமடி
பிஞ்சு விரல் பிசைந்து பஞ்சுக் கால் உதைத்து
தொண்டைக்குள் ஏதோ மெட்டிசைத்து
முகம் பார்த்துச் சிரிக்கும் முத்துமணியே
நீ இறைவன் வரமளித்த அமுதக் கனியே
வளங்கள் எல்லாம் பெற்று வாழ்க நீ பல்லாண்டு

❖ ❖ ❖

## தூது சொல்லாயோ தோழி

நிஜங்களை மறந்து நினைவினை இழந்து
நித்தம் வாடுகின்றேன் நெஞ்சம் விம்முகின்றேன்
கோடிப்புறத்தில் வந்து கொஞ்சிச் சென்றாரே
வாடிப்புறா காத்திருக்கேன் வந்தெனைக் கூடாரோ
தேடிப் போய் என் தேவனைக் கண்டே
தூது சொல்லாயோ! தோழி தூது சொல்லாயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாய் ஒரு விதி செய்வோம்

மெய்ஞானம் நம்பியே அஞ்ஞானம் அழிப்போம்
உழுது உண்டே விருந்தோம்பல் பேணுவோம்
புதுமைகள் எல்லாம் நலனுக்காய் பயனுறுவோம்
அரும்பிய வன்மைகளை முளையிலே வேரறுப்போம்

பெண்சிசு முதலாய் பேரிளம் பெண்வரை
அன்னையாய் சகோதரியாய் சேவித்துக்கொள்வோம்
கஞ்சா கசிப்பு கைவிட்டுப் போனால்
காமுகம் வந்து தலையேறி நிற்காது

வஞ்சனை களவு வாள்வெட்டு
பஞ்சணை வெறி கொடும் சீதனம்
எதுவும் வேண்டாம் மாந்தர் எமக்கு
நெஞ்சினில் கொள்வோம் உறுதிமொழி

பஞ்சம் நீக்கிடப் பயிர் வளர்ப்பபோம்
நெஞ்சுரம் கொண்டே நீதி வளர்ப்போம்
காதலில்கூட கண்ணியம் சேர்ப்போம்
கைம்பெண் வாழ்விலும் ஒளி கொடுப்போம்

பிரிவினை களைந்தே குணம் வளர்ப்போம்
நடுநிலை வழங்கியே கல்வி கொடுப்போம்
போனவை போகட்டும் இனிமேலும் நாம்
புதிதாய் வாழ்ந்து புதுயுகம் அமைப்போம்

நன்றே செய்க அதையின்றே செய்க
எனக்கூறி புதிதாய் ஒரு விதிசெய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழித்தெழு தமிழா

வந்தோரை வரவேற்ற பண்பாடும்
வரலாறு போற்றும் ஒழுக்க சீலமும் கொண்ட
தமிழர் பண்பாட்டு வாழ்வுதனை
தரணியிலே காணத் தவம்தான் புரிந்திடனும்

ஒருத்தனுக்கு ஒருத்தி நிலைமாறி இங்கு
ஓரிடத்திற் கொருத்தியென காளையரும்
பணத்திற்கும் அரட்டைப் பொழுதிற்குமாய்
பத்தினிகளும் இன்று பத்து வீட்டுப் படிகளிலே

மலிந்துவிட்ட கைபேசிகளின் சகவாசம்
அதில் நீலப்படம் இணையவசதி
அரங்கேறும் கலாச்சார சீர்கேடும் சில்லறைத்தனமும்
அணைகட்ட எவருமின்றி அழுகிறது கலாசாரம்

தொழில்நுட்ப வளர்ச்சி நவீன உலகம்
ஓசோனில் மட்டுமல்ல மாசுக்கள் நம் மனங்களிலுமாய்
மாறலாமா மறத்தமிழா! மாசற்றறு வாழ்ந்திடவே! புறப்படு
இன்னும் என்ன தாமதம் விழித்தெழு தமிழா வீறுகொண்டே

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒடுக்கப்பட்ட இனம்

உலகை ஆண்டான் தமிழன் என்று
ஒருசேதி மட்டும் வரலாறு ஆகியது
கடாரம் வென்ற தமிழன் கையில்
கடுகளவும் நிலமும் கைகளில் இல்லை
இனவாதம் மேலோங்கச் சதியாட்டம் போடுது
இன்னல்கள் மட்டும் எமதாகிப் போகுது
அடிப்படை வாழ்விற்கே அல்லாடும் நிலையில்
அரசாளும் நிலை கனவிலும் வருமோ
உழைப்பிலே சுரண்டல் ஊதியம் நிறையாமை
கல்வியும் மருத்துவமும் காசுக்காறன் பக்கமே
உணர்வுகளை ஊனமாக்க திட்டங்கள் நடக்குதே
உணர்ந்தும் வழியின்றி வாழ்வும் தொடருதே
பதுங்கு குழிகளில் பலகாலம் வாழ்ந்தோமே
பயந்த கண்ணோடு கதைபல சொன்னோமே
இருந்தும் இங்கே வேறென்ன மாற்றம்
இனிமேலும் பொறுப்போமா முடிவொன்று இல்லையே
ஒடுக்கப்பட்ட இனமாய் ஒதுங்கி நின்றால்
ஓநாய்களின் ஓலம் பூமியை நிரப்பிடுமே
அடங்கிக் கிடப்பதற்கு நாமொன்றும் அடிமையில்லை
ஏதிலி வாழ்க்கைக்கு இனிமேலும் இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தேடல்

சொந்த நாட்டிலே சுகமாய் வாழ்வின்றி
சுபீட்சம் தேடியே நம் வாழ்வு தொடர்கின்றது
அகதியாய் முடிசூடி வெளிநாட்டு வாசம்
நாடு திரும்பும் நப்பாசையில் தொடர்கின்றது
அடிப்படை வாழ்வாதாரம் வெறும் கனவாய்
அடிவயிற்றுப் பசியின் அலார ஓசையாகியது
உறையுள்ளும் உணவும் தேடித் தேடியே
ஊமையாகிப்போகின்றது எமது தேடலின் வேகம்
ஏற்றத்தாழ்வுகளின் இயக்கம் இருக்கும் வரை
ஏட்டுக்கல்வியிலும் இறுக்கம் தளரவில்லை
பகுத்தறிவு ஜீவனாய் சிலரின் தேடல்
பண்பாட்டின் வழியே சோர்ந்து விடுகின்றது
களம் காணா போராளியாய் உணர்வுகளும்
தளம் கிடைக்கா கவிஞர்களாய் நாமும்
தமிழ்ச் சாகரத்தில் இரண்டறக் கலக்கும்
எமது தேடலும் தேடலாய்த் தொடர்ந்தே!!!

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊஞ்சல் வாழ்க்கை

ஏற்றமும் தாழ்வுமாய்ப் பொருளாதார நிலை
ஏய்த்துப் போகும் உறவுகளின் பாசம்
குலைந்து விட்ட கூட்டுக் குடும்பம்
களைந்து போய்விட்ட பாரம்பரியம்
சாதியும் மதமும் மாறி மாறிச் சண்டையிலே
வாளெடுத்து வீழ்த்துகின்றது வீரத்தின் மனிதத்தை
வறுமையும் பிணியும் ஏழையின் வீட்டிலே
வளமும் வாழ்வும் முதலாளி மாடத்திலே
சுழன்று அடிக்கும் இயற்கையின் அனர்த்தங்கள்
சுக்குநூறாகும் குடியிருப்பின் நிலையியல்
முன்னேறத் துடிக்கும் பெரு முயற்சியாளன்
முடங்கிப் போகின்றான் முட்களின் பாதையிலே
சூதும் வாதும் சூழ்ந்திடுமுன்னே
வாழ்வும் பேறும் அடைந்திட எண்ணி
அங்கும் இங்குமாய் அலைகடல் தாண்டியும்
ஊஞ்சல் ஆடும் வாழ்வின் மாயம்
நீதியும் நேர்மையும் நிழல்கூட இன்றி
மலிகின்ற போலிக்குள் மறைகின்ற காலம்
அன்பை விற்று அடிமையை விலைவேண்டி
அற்ப வாழ்விற்குள் அமிழ்ந்து போகின்றது

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாயில் நாங்கள்

செவ்வாயில் நாங்கள் இன்னோரு
அன்பில் கலந்த ஆதாம் ஏவாளாய்
இல்லறம் செய்து பரம்பரையொன்றைப்
பிரசவிக்கும் எங்கள் பணி
செயற்கைச் சுவாசம் பூட்டி நாமும்
அங்கே முளையிடப்பட்ட
தாவரங்களுமாய்த் தொடரும் சிலகாலம்

பின்நாளில் இந்தச் செவ்வாயில்
பிராணவாயு உற்பத்தியாக்கி அவை
பரவி வியாபித்து இன்னும்
எமக்கு உயிர்வாழும் சாத்தியம்
எக்கச்சக்கமாய் உருவாக்கி மீண்டும்
ஆதிவாழ்க்கையின் ஞானம் பிறந்து
நவீனம் சேர்த்து நலமாய் வாழ்வோம்

அதற்குப் பின்னேயும் அங்கேயும்
நெகிழிக் குப்பைகளும் வரலாம்
பிரளயத்தை உருவாக்கும் வீச்சுக்
கதிர்களும் வரலாம்
அங்கேயும் எமது பிராணவாயு
மாசுக்கள் சேர்க்கப்படலாம்
மீண்டும் ஓர் பூமிக்குப்பை போல்
செவ்வாய்க் குப்பை தோன்றப்படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்தும் இன்னொரு கிரகத்திற்கு
எம் பரம்பரைகள் அனுப்பப்படலாம்
புதிதாய் இன்னொரு ஆதாம் ஏவாளாக
ஏனென்றால் மானிடன் என்றுமே
மாறப்போவதில்லை அவனை மாற்றும் சக்தி
எந்தக் கிரகத்திற்கும் இல்லை

❖ ❖ ❖

## துரோகம்

கேட்பார் புத்தி
தோற்றுப் போகின்றது
நெடுநாள் நட்பு

மணமுறிவு அதிகரிப்பு
குடும்பம் பிரிகின்றது
அன்பில் துரோகம்

விடுதலை மூச்சு
அடங்கிப் போகின்றது
இனத் துரோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனங்களின் மாற்றம்

வந்தோரை வரவேற்ற பண்பாடும்
வரலாறு போற்றும் ஒழுக்க சீலமும்
கொண்ட பண்பாட்டு வாழ்வுதனை
தரணியிலே காணத் தவம்தான் புரிந்திடனும்

ஒருத்தனுக்கு ஒருத்தி நிலைமாறி இங்கு
ஓரிடத்திற் கொருத்தியென்று காளையரும்
பணத்திற்கும் அரட்டைப் பொழுதிற்குமாக
பத்தினிகளும் இன்று பத்துவீட்டுப் படிகளிலே

மலிந்து விட்ட கைப்பேசிகளின் சகவாசம்
அதிலே நீலப்படம் இணைய வசதிகள்
அரங்கேறும் கலாச்சாரச் சீர்கேட்டு சில்லறைதனங்கள்
அணைகட்ட எவருமின்றி அழுகின்றது தமிழினம்

மதுவும் மாதுவும் எனக்கில்லை என்றால்
மரியாதை எங்கும் இல்லையென்பார்
பெண்ணாசை பொன்னாசை மண்ணாசையோடு
பதவியும் சேர்ந்து பண்பாட்டை மாற்றுது

மாறலாமா மறத்தமிழா? மனங்கொள்
மானமாய் மாசற்று வாழவே!!!

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை நேரம்

நீலவானம் செங்குருதி பூசினாற் போல் நிறம்மாறி
நிலமீதின் நீர்மங்கள் உறிஞ்சிய மயக்கத்தில்
கதிரோனும் கண்ணயரக் கிளம்பிவிட்ட
கருக்கல் நிறையும் பொன்மாலை இனிது

தோட்டம் துறவு எல்லாம் நீர்விட்டு
தொழிலாளர் கூட்டம் தன்வீடு விரைய
உழைப்பாளி உடல் சோர்ந்து மனைசேர
விரையும் நாளிகையின் நன்மாலை இனிது

கல்வியும் களி விளையாட்டும் முடித்து
கண்மணிகள் திரும்பும் கனவு மாலை
காதலனைத் தேடி கடற்கரை விரையும்
காரிகையின் கண்மயக்கும் கவி மாலை இனிது

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்காகவே நான் வாழ்கின்றேன்

கட்டாந்தரையாகக் கிடந்த கன்னியென் மனவெளியில்
காதலெனும் சாரல் மழை தூவிச்சென்றது நீதானே
மெல்லத் துளிர்த்த அரும்புகளில் விரைவாய்க்
காதற்பூக்கள் கனதியாய்க் குலுங்கினவே

என் இளவேனிற் காலத்து முதல் பூவாய்
மலர்ந்த காதலிலே வசந்தத்தை நுகரவைத்தாய்
என்னுள் நீயே ஒய்யாரமாய் குடியமர்ந்து
என்னை எனக்கே அறிமுகம் செய்தாய்

கற்பனைச் சிறகு கட்டவிழ்ந்து பறந்தனவே
கணவனாய் உனைச்சேர கன்னியிவள் துடித்தாளே
பார்க்கும் உலகமெல்லாம பலவர்ணம் ஆகினவே
கேட்கும் ஒலிகளெல்லாம் உன் குரலாய் இசைத்தனவே

முத்தமழைக்குள் மூழ்கித் தவிக்கலையே
உன் மூச்சுக்காற்றேனும் என் உடல் உரசலையே
அன்பெனும் உறவிணைத்து காதலாய் மகிழ்ந்தாலும்
கடமைகள் உனையழைக்க காததூரம் சென்றனையே

கச்சிதமாய் உன் பணி முடித்து
கரம் பிடிக்க வருவாய் என
காத்திருக்கின்றேன் இன்னும் உயிர் சுமந்தே
உனக்காகவே நான் வாழ்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசர உலகம்

அலுவலகம் செல்லும் அவசர பயணம்
அள்ளி உடுத்தி அரைவயிறு நிரப்பி
ஆம்புலன்ஸ் சேவைபோல் என் உந்துருளி
ஆர்ப்பாட்டமாய்த் தொடங்கும் தினம் பயணம்

எதிர்த்திசையில் வரும் உந்துருளியில்
மார்போடு இறுக்கி அணைப்பிட்டு
குழந்தை தூங்கியிருக்க துரிதகதியில் பறக்கும்
அந்தப் பெண் என் பார்வைக்குள் தினம் வந்தாள்

துணைவன் தக்க துணையின்றி உறவுகள் தூரமாகி
சுமைகள் சுகம் தொலைத்து கனவுகள் வறண்ட கண்கள்
தினம் புதிதாய் விடியும் என எதிர்பார்ப்பு பொய்யாகி
விரக்தியுற்ற வதனம் அவளுக்கும் அலுவலக அவசரம்

அவள் வதனம் காணும் நேரம் நெஞ்சுக்குள் பிசையும் சோகம்
பார்வைகள் பரிச்சயமாகி உதடுகள் புன்னகைக்க தொடங்கியது
காரணமின்றி முகவரியின்றி ஏதோ இனம்புரியா உணர்வலைகள்
எம்மை பார்வை நட்பில் பவ்வியமாக இருத்திக்கொண்டது

தொடரும் மூவாண்டுப் பயணத்தில் அவள் வதனதத்தில்
ஏதும் மாற்றமில்லை குழந்தை மட்டும் வளர்ந்து
அணைப்பேதுமின்றி தானாக அமர்ந்து
செல்கின்றான் குழந்தைகள் காப்பகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பய(ண)ம்

வீதிச் சட்டம் புறக்கணிக்கப்பட்ட வீதியூடே
விதியை நொந்தபடி செல்லும் என் பயணம்
கடன் சுமையோ காதல் கனவுகளோ
இடர் தொடரோ இன்னும் என்னவோ
பார்வையை எங்கோ தொலைத்து பாதசாரியும்
பாவியென் பயணம் முன்னே இடறுப்பட்டே
அளவான வேகத்தில் பக்கத்தின் சரிபார்த்து
பொறுப்பாக போகினும் பொடிப் பயலின்
புல்லட் ஒன்னு புஸ்சென்று உரசிப்போகும்
காலனிடம் செல்ல அவனுக்கு பயமில்லை
கடமைகள் எனக்கிங்கே கனதியாய்க் கிடக்கிறதே
நாய்களின் பெருக்கம் நடுவீதிவரை வந்தாச்சு
தேங்கிய குப்பைகள் தெருத்தெருவாய்ப் பறந்தாச்சு
மூச்சுக்காற்றில் முட்டிநின்ற புழுதியுடன்
இரைச்சல் உலகில் நானும் ஒருவனாய்
அவஸ்தைகள் தொடரும் பயணங்களாய்
இன்னும் தொடர்ந்தபடி

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆம்புலன்ஸ் கடவுள்

அவசர உலகில் நானும் அரைவயிறு நிரப்பி
அலுவலகம் விரைகின்றேன் - மனதுள்
ஆயிரம் கேள்விகள் பதில்கள் கவலைகளாக
மனசு எங்கோ லயித்திருக்க
வண்டி மட்டும் நகர்கின்றது
பழகிப் போன பாதை என்பதால்......

சட்டென்று மனதுள் ஏதோ சறுக்க
பட்டென்று நழுவி விலகிய பயணம்
பெருமரத்தோடு முட்டி மருண்டு விழ
தெருக் கரையோரமாய் நானும் குருதி வெள்ளமதில்

எங்கெங்கோ பெரும் வலிகள் ரணமாக்க
உடல் அசைவு ஏதுமின்றி உயிர் துடிக்க
கண்ணுள் ஆயிரம் காட்சி மின்னலிட
கடவுளை மனது இயல்பாய்த் தொழுகிறதே

மனைவியின் மஞ்சள் முகமும் குங்குமச் சிவப்பும்
பிள்ளைகளின் பூமுகம் பொங்கும் பாசம்
என் கடமைகளின் பட்டியல் மனதுள் வந்துபோக
கடவுளே வந்துவிடு என்னைக் காப்பாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லவிருந்த மென் உணர்வும் மெதுவாக மறைய
சுற்றியென் அருகெல்லாம் ஏதேதோ சந்தடிகள்
மெல்ல மரணிக்கும் என் செவியிடை
கேட்கும் ஓர் ஒலி கடவுள் வந்துவிட்டார்..

ஆம்... ஆம்புலன்ஸ் வண்டி வருகின்றது.
இனி எனக்கென்ன பயம்
என் கடவுள் வந்து விட்டார்.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பாதை

நான் நானாக வாழ வேண்டும்
என் சுயங்களை வீழ்த்தி
அதில் சிம்மாசனம் இட
எவருக்கும் அனுமதி இல்லை.

பெற்றவர் சுமை நீக்கி
மற்றவர் நலன்பேணி
சுற்றத்தார் சுகம் காத்து
சமூகத்தின் வலி துடைத்து

தென்றலை தூசு தட்டி
பண்பாட்டை பதப்படுத்தி
கல்விக்கு கை கொடுத்து
கலங்கரை விளக்காய்

ஒளிர்ந்திட வேண்டும்
பெண் என்ற பேதமைக்குள்
பக்குவமாய்த் திணித்து விடும்
பணிநிலை இனிவேண்டாம்

எத்தனை எதிர்பார்ப்புக்களை
எத்தனை திறமைகளை
இன்னும் எத்தனை எதனையும்
ஆழ்மனத்திட்டு அடைகாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கப்பெருமூச்செறியும்
எதுவும் இனி வேண்டாம்
மனங்களின் கதவைத் திறந்து
சமூகத்தின் பாதை கடந்து

நான் நானான பயணிக்க
நல்வாழ்த்துக் கூறுங்கள்.

❖ ❖ ❖

## பேரின்ப வரம்

தொண்டைக்குழியிறங்க மறுக்கும் உணவு
தலை சுற்றி மயக்கம் போட்டு
உடல் அசைவு வலியெடுத்து
அத்தனை வலியும் சுமந்து ரசிப்பாள்
பத்து மாதம் பவித்திரமாய்ப் பேணி
உயிர்ப்பிறப்பின் அந்த நொடியில்
மரணவலியாய் அவள் துடிப்பாள்
பெண்ணின் மகத்துவம் முழுதும் பெற்ற
பேரின்ப வரமாய் மகிழும் தாய்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌனித்து அழும் இராப்பொழுதுகள்

காதலாகிக் கசிந்து மலர்ந்த மணவாழ்க்கை
காலம் செல்லக் காணாமல் போகும் பாசம்
கண்துஞ்ச மறுக்குமவள் இராப் பொழுதுகளில்
அணைக்க அரவணைக்க கைகள் வருவதில்லை
ஏகாந்தமாய் வெறித்தபடி ஏக்கப்பெருமூச்சுடன்
எதிர்பார்ப்புக்கள் மட்டும் கூடுகின்றது அது
உறவுக்கான ஏக்கமல்ல தினம் உழைத்து
ஓய்ந்த உடம்பும் மனதும் சிறு உரசலை
அரவணைப்பை ஏங்கிப் பெருமூச்செறியும்.
இரண்டுமணிச் சாமம் வரை மனம்
நித்திரைக்காய் முயற்சித்து பின் அவன்
அன்புக்காய் யாசித்து மிஞ்சுவது வெறும்
ஏ(ன்)மாற்றம் மட்டுமாகி தவமிருக்கின்றன கண்கள்

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களின் வரமா

அன்பே என்றாய் அறிவே என்றாய்
கண்ணே கலங்காதே காவல் நானென்றாய்
என் கண்ணீரில் கரைந்தே போவாய்
அணைப்பாய் என் கோபங்களை சகிப்பாய்

வேலைகளை பகிர்ந்திடுவாய்
மோகம் முப்பதாய் ஆசை அறுபதாய்
முடிந்துவிட்ட காலமதாய் பாவம் நீயும்
நீ என்ன ஆண்வர்க்க விதிவிலக்கன்றோ

மனம்விட்டுக் கதைத்திட்ட நிமிடங்கள் கூட
நிரந்தரமாய் விலகிப் போனது
அறிவைக்கூட்டிட ஆசையில் ஓடினேன்
அதையும் முட்டாள்தனம் என எள்ளிநகையாடினாய்

என் கோபங்களின் நியாங்களை புரியாமலே
அநியாயம் சொல்லி நகர்ந்தாய்
என் மனமதின் மென்மை உணராமலே
கூடாத மனமென்று குறைகூறிக் கொன்றாய்

என் தேவைகளின் ஆசைகளின்
நீரோட்டத்தை அணைபோட்டு
அனலில் தினம் கொதிக்கவிட்டே
தினம் அழகு பார்க்கின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாத ஜென்மங்களாய் ஆண்கள் தொடர
புண்பட்ட காயங்களாய் என்றும் பெண்களே
இது என்ன வரமா எம்மைப்
படைத்தவன் இட்ட சாபமா?

❖ ❖ ❖

## அனல் கக்கும் கண்கள்

வாய்பொத்திப் பெண்ணை அடக்க நினைக்கும்
வன்முறையாளனே அவள் கண்களைப்பார்
அனல்கக்கும் கருவிழிகள் ஆயிரம் கதை சொல்லுமடா
அழிந்தே போவாய் அவள் சபதமிட்டால்

வன்முறையெனும் இரும்புக்கரம் கொண்டு அவள்
ஆளுமைகளை அடக்க நினைக்கும் அற்பப் பதர்களே
நினைவில் கொள் பெண் என்றுமே பெருநெருப்பே.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றுக் காகிதங்கள்

பருவ வயது பளபளக்கும் வனப்பு
பள்ளியிலே துள்ளும் இளம் குருத்து
அம்மாவின் அறிவுரைகள் அவள்
ஆசிரியை ஆகிவிட்டாள்

அழகுண்டு அறிவுண்டு கையில்
அழகான பதவியும் உண்டு
ஏழ்மை அவள் வயதை ஏற்றியது
சீர்தனம் தேடியே அவள் வயதும் கரைந்தது

வனப்புக் குறைந்து வறுமையும் குறைய
வயது மட்டும் விழிபிதுங்கி நின்றது
வந்தனர் உண்டனர் போயினர் அவள்
கனவுகள் கரைந்து கானல் நீராகியது

இன்றும் அவள் இல்லத்தில்
வரன்களின் குறிப்புக்கள் வந்தபடியே
எல்லாம் வெறுமைக்குள் ஒளிந்துவிட்ட
வெற்றுக் காகிதங்களாக .!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருப்பு

பத்து வயது கொஞ்சம் புரியும் வயது
அன்று தொட்டு இன்றுவரை
பெண்ணியம் சமவுரிமை சொற்பதங்கள் பல
ஆய்வுக் கட்டுரைக்கும் அழகிய கவிதைக்கும்

மேடைப் பேச்சிலே வாய்ச்சமர் செய்திடவும்
அரசியல் வாக்குகளை அள்ளிப் போவதற்கும்
அமைந்த சொல்லாய் மட்டும் தொடர்கிறது
ஐம்பதின் அகவையிலே என் பயணத் தொடரில்

நாற்பதாண்டின் பெண்ணுரிமை முழக்கமாகி
வெறும் மேடைப் பேச்சோடு முடிகின்றதே
போராட்டம் ஆர்ப்பாட்டம் எது செய்து கொண்டாலும்
பெண்ணடிமை என்றும் மாறாமலே

இன்னும் எத்தனை காலம் காத்திருப்போம்
எங்கள் கனவு மெய்ப்படவே

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமையின் புலம்பலொன்று

அழகாய் இரண்டு அல்சேசன் குட்டிகள்
எனக்குப் பிள்ளைகளாய் பேரக்குட்டிகளாய்
அமெரிக்காவில் வாழும் எனதாசை மகன்
எனக்காய் வாங்கிவிட்டுச் சென்றுவிட்டான்

அடுத்த விடுமுறையில் லண்டன் மகள்
குளிர்சாதனப் பெட்டியுடன் வீடு நிரப்பும்
மிகநீண்ட தொலைக்காட்சிப் பெட்டியுடன்
விரைவாய் வேண்டி அடுக்கிச் சென்றாள்

இரண்டுமாதம் கழித்து இளையமகன் வந்து
கனடாவின் கண்டோசும் களிசுவைகளும்
இருந்த இடத்தில் சுகரும் பிறசரும் பார்க்க
பரிசோதனைப் பெட்டியும் தந்து போனான்

இந்தப் பெரும்வீட்டைக் காக்கும்
பெரும் பூதமாய் நான்மாறி
சமைத்து உண்ண உடல் விடாது
சலித்துவிட்ட உலகில் சயனமே சொர்க்கமாக

கச்சானென்ன கண்டோசென்ன என்
வாய் அரைக்கும் அனைத்துப் பண்டமும்
அருகிருந்து இரு அல்சேசன்களும்
அரைத்துப் பழகி அவையும் பெருத்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பருத்தி சீரியல் பார்த்துவிட்டு
அடுத்த சேனலுக்கு நான் மாத்த
இரண்டும் ஓலமிடும் செம்பருத்தி பார்ப்பதற்காய்
சீரியலுக்கும் இந்தச் சீமான்கள்
அடிமையாகிப்போகின

லண்டன் மகளை ஒருதலையாய்க் காதலித்த
லட்சுமி அக்காவின் கடைசி மகன்
இன்னும் ஒத்தாசையாய் எனையெட்டிப் பார்ப்பான்
நலன்கேட்டு பணிவிடை செய்தான்

நாசமாய்ப்போன நான் அன்றே அவனை
மருமகனாக்கி பக்கத்தில் வைத்தேனா?
இனியென்ன புலம்பி இருக்கின்ற காலத்தை
இப்படியே ஓட்டிடுவன் காலன் வரும் வரையே

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழன் பெருமை

ஆண்டாண்டுகாலம் ஆண்டபரம்பரை
அடிபணிந்து வீழா விடுதலை உரமிவன்
கருவிலேபிறக்கும் மானத்தின் மூச்சிவன்
கலையோடுபண்பாடும் கலந்திடும் கலைஞனவன்
வந்தோரைவரவேற்கும் வரலாற்று வேந்தனிவன்
தன்மானம் தலைத்தோங்கும் தரணியின் புதல்வனிவன்
முத்தமிழும் நற்றமிழும் நடைபயிலும் நாவிலிவன்
மாறாதநேசம் தாய் நாட்டின் மேலிவன்
எரியும் நெருப்பிலும் எழுந்துநிற்பான்
எதிரியின் வலிமையை எளிதிலில் வெல்வான்
வாரிக் கொடுப்பதில் வள்ளல் தனமிவன்
வறுமையை என்றும் ஒதுக்கா மனமிவன்
வீரத்தின் வேகத்தில் ஒப்பில்லாத் தீரனிவன்
வரலாற்றில் இடம் பிடித்ததங்கத் தமிழனிவன்
திசையெங்கும் பரவிநிற்கும் தமிழின் பெருமையிவன்

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருவேன் அண்ணன் உனக்காகவே

கொட்டும் பனிக்குள் கூதல் உயிர்பிடுங்க
குறுகி நின்று குருதி உறைந்து
உங்கள் நலனுக்காய் எனையுருக்கிறான்
ஊரனுப்பும் காசு உள்ளங்கை வந்திடுமே

ஊதாரிதனம் மெத்தி ஊர்சுற்றி
உழைப்பின்றிக் காசை ஊற்றி இறைத்து
போதைப் பழக்கமுடன் வேலிதாண்டிப்
போவதற்காய் நானிங்கு வாடுகின்றேன் தினம்
கைப்பேசிக் காதலுடன் களியாட்டம் சேர்ந்து
சிற்றின்ப ஆவலுக்குள் அடங்கிப் போகவா
நானிங்கு வாடுகின்றேன்.

உற்ற வயதில் நற்றுணை தேடாது
பெற்றகடன் சுமை போக்க
பின்பிறந்த உன் பந்தம் சிறந்தோங்க
பாடுபட்ட காசெல்லாம் மதுவழியே மறைகிறதாம்
கல்வியிலே சான்றோனாய் தடம் பதிப்பாயே
ஒழுக்கத்தில் வழிநடந்து நற்பெயரெடுப்பாயே
சாதனைகள் நிலைநாட்டி தலைநிமிர்வாயே
நால்வருக்கு நீயும் நன்று செய்வாயே
என்றெல்லாம் கனவு தினம் காணுவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரமும் நன்னெறியும் கலந்து அம்மா ஊட்டும்
அந்தப் பழஞ்சோற்று உருண்டைமறந்து போனாயோ
ஆகாயம் பார்த்து அண்ணாந்துபடுத்து இந்த
அண்ணன் இட்டபண்புகளை மறந்து போனாயோ
தாய்மொழி மறந்து தன்மானம் இழந்து
தரங்கெட்டுப் போகும் கூட்டம்தான் சேர்ந்தனையோ
வீரம் விளைந்த நிலமிது மறந்து
வீண்வம்புகொண்டு திரிந்து அலைவதேனோ
என் நேசமுள்ள சோதரா கேட்காயோ உன்
பாசஅண்ணன் படும்பாடு அறியாயோ
வீணர்களின் கூட்டிலிருந்து விலகி வந்துவிடு
தாய்மண் சிறக்க பாடுபடு
உன் சந்ததிசிறக்க வேலையெடு
விடியும் உனக்காய் நல்வாழ்வுஅங்கே
வருவேன் அண்ணன் அகல் விளக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரட்டைமுகம்

அன்பைச் சொரிந்து அழகு முகங்காட்டி
அகத்துள் தீயிட்டுச் சபித்துக்கொள்வார்
ஆசைக் கரம் நீட்டிநேசமுரைத்து
ஆங்கே பேச்சின் வீச்சில் பழித்துரைப்பார்

பரிவுகாட்டிஉதவிகள் நல்கியே
பின்னால் அதையே கூறிச் சினப்பார்
கடமை என்றெண்ணி தவறு உரைத்தால்
காரணம் காட்டியே விலகி நடப்பார்

ஏழைக்கு முன்னால் இளகிநின்று
போனதும் பின்னால் புளுகிச் சிரிப்பார்
கூறிய வார்த்தையை இல்லையென்றாக்கி
கூடாதவனாய்க் காட்டி குழி பறிப்பார்

வஞ்சகம் விரிந்த மனத்திரை மறைத்து
வடிவாய்க் கண்களால் பூத்துச் சிரிப்பார்
கழன்று விழாமல் கச்சிதமாய்த் தொடரும்
இரட்டைமுகம் இன்னும் உலகில்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேர்களில் துளிர்ப்பு

விடுதலை உணர்வு மறந்து
அகதியாய்ப் பயணம் தொடர்ந்தோமே
பிணங்கள் கடந்து பிணிகள் தொடர
வயிற்றோட்டமும் வாந்திபேதியும் உடம்பை உருக்க
வயிறு பசியால் துடித்து அழ
பதுங்கு குழிக்குள் சுவாசம் முட்டி
அரை வயிறு நிரப்பி இரத்த வீதி
காற்றிலே கந்தக நெடி
குண்டு மழையெங்கும் அவலச் சத்தம்
மிஞ்சிய உறவுகளுடன் முகாம்களில் வாழ்க்கை
அன்றே எங்கள் வரலாறு தடம் மாறிப்போயாச்சு

நடந்தவை பற்றி மறக்க முடியவில்லை
மறப்பதற்கு நியாயம் ஏதுமில்லை
எனினும் ஏன் தமிழா மாறிவிட்டாய்
இலஞ்சம் களவு சூதாட்டம் நீலப்படம்
கண்களில் கண்ணியம் இல்லை
வார்த்தையில் வாண்மையில்லை
உழைப்பிலே சுரண்டல்
உண்மைகளின் உறைதல்
பாதுகாப்பின்றிப் பெண்மை
பருவம் வருமுன்னேக் காதல்

வீரமும் நன்னெறியும் விளைந்த பூமியில்
வீணர்களின் அட்டகாசம் விடுதலையின் வேரறுப்பு
வலிக்கின்றது விடிவுதான் என்ன?
பாலைவனமாக்கப்பட்ட மனக்காட்டில்
வேர்களில் இருந்தும் விடுதலையின் துளிர்ப்பு
அரும்பட்டும் அதற்காக என் கவியும்
தூறல் போடட்டும்

■ கவிஞர்.ந.ப.காங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா ஏனம்மா

ஏனம்மா இப்படிச் செய்தாய்

கள்ளிப் பாலில் தப்பி வந்த நீயா அம்மா
கருணையற்று கொலை செய்தாய் நான்
கதறும் அந்த ஒரு நொடியில்
உன் மனசில் என்னம்மா நினைத்திட்டாய்
வக்கிரம் கொண்டு வாஞ்சை மறந்தாயா
வறுமை உன் மனதைக் கல்லாக்கி விட்டதுவோ

அநாதைப் பட்டமோடு ஆச்சிரமத்தில் நீ வளர்ந்த
அல்லலதை நினைத்தாயோ
கருவிலே என்னைக் கருத்தழித்திருந்தால்
கன்னி நானின்று கஸ்ரப்பட மாட்டேனே என்று நீ
கண்ணீர் சிந்தியதை மீட்டுப் பார்த்தாயா
அதனால்தான் நீயென்னைப் பிஞ்சிலே அழித்தாயா

உல்லாசம் அனுபவித்து ஊர்விட்டு ஓடினானோ
உன் புருசன் இல்லையில்லை என் அப்பன்
அன்றில் வெறிகாறனோடு வீணாய்ப்போனதுவோ
உன்வாழ்க்கை அதனால் வந்ததுவோ விரக்தியின்
வேகம்

பிஞ்சு என்னைக் கொன்றுவிட்டு
பிடாரி அவள் ஓடிவிட்டாள்
ஓடுகாலி என்றெல்லாம் உனையம்மா
ஊரார் சொல்லுவதைக் கேட்டாயோ
உண்மையிலே நீ உயிரோடு உள்ளாயோ அம்மா
அன்றி எங்கோர் மூலையிலே உன் மூச்சும்
அடங்கித்தான் போனதுவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணவள் கோழையன்று என்றே
பெருமையாய் வாழ்ந்து காட்டிடத்தான்
இப்பெருஞ் சமூகம் விடவில்லையோ
ஏனம்மா இப்படிச் செய்தாய் எனை
ஏன் மூச்சடக்கிக் கொன்றாயம்மா?

ஆசை தீர உன்முகம் காண
ஆவலாய்த் தேடுகின்றேன்
கெட்டாளும் என் அம்மா என் அம்மாதானே
கேளுங்கள் அன்னையரே
யாரேனும் இப்படிச் செய்யாதீரே
கடைசியாய்க் கேட்கின்றேன் அம்மா
ஏனம்மா இப்படிச்செய்தாய்
காரணத்தைத் தேடுகின்றேன்.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிமலையும் சிறுபொடியே

ஆண்டாண்டு காலம் ஆண்ட பரம்பரை
அடிபணிந்து அல்லலுற்று அவனியிலே வாழ்வதா
விடுதலையே எங்கள் பேச்சு அதில்
வீரத்தமிழன் மானந்தான் முதல் மூச்சு

உயிரணுவில் கலந்தே பிறந்த முத்தமிழ்
உன்னத நிலையடைந்த கலை பண்பாடு
எங்கே எங்கள் உணர்வுகள் எங்கே எங்கள் வீரம்
போதை மயக்கத்திலே புறப்படும் இளைஞனே
சற்றே நில்லு

பெண்ணவள் கடவுள் அவள் உன்தாயே
படிதாண்டிப் போகும் பாவையே நில்லு
பைங்கிளி நீதான் உலகத்தின் இயக்கம்
புரிந்துகொள் நடந்திடு நன்னெறியில்
நாடும் வீடும் நலம்பெறும் உன்னாலே

விலைபோன உள்ளங்களே சற்றே சிந்தியுங்கள்
அடங்காத்தமிழன் ஆண்ட மறவன்
புலமையிலே அவனுக்கு நிகரில்லை எங்கும்
வரலாறு படியுங்கள் வாழ்க்கையைத் தேடுங்கள்
வீரம் விளையும் நிலமிது தானே
விதைப்பது எதுவென முடிவெடு

எரியும் நெருப்பிலும் எழுந்து நிற்போம்
புதிதாய் உலகம் மாசற்று அமைப்போம்
தமிழா நீயும் திரண்டு எழுந்தால்
எரிமலைகூட சிறுபொடியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவுச் சிறகு

செங்கதிரோன் செங்கண் திறக்க
மொட்டவிழும் மொட்டுக்களில் மென்வாசம் பூச்சூட
சிட்டுக் குருவிகளும் சிறகசைத்து இசைபாட
வையகமே விழித்திடும் வனப்பான விடியலிலே
நெற்கதிர்கள் வளைந்தாட நற்காற்றுத் தாலாட்ட
வானுயர்ந்த மரங்களூடே பறந்து
தென்றலைத் துளைத்துக் கொண்டு செல்கின்றேன்

நெடிதுயர்ந்த மலைகள் கொட்டும் அருவி
பச்சைக் கம்பளமாய் அடர்காடு
சின்னக் குன்றுகள் வியர்வை சிந்தி உழைக்கும்
விவசாயிகள் அவர்தம் விளைபயிர்கள்
வெள்ளை மணற்தரை அலையாடும் கடற்கரை
பனிச்சாரல் மேகமூட்டம் மேனி சிலிர்க்கும் பள்ளத்தாக்கு
அப்பப்பா!!!!!!

இயற்கையின் அழகையெல்லாம் அள்ளிப்பருகி
அனைத்தும் கடந்து என் பயணம்
போர் வேண்டாம் இரத்தம் வேண்டாம்
போலியான உறவுகள் வேண்டாம்
வஞ்சம் கொலை களவு வெறியாட்டம்
எந்தத் தவறும் நான் காண வேண்டாம்
பொறாமை வேண்டாம் பாச வலையும் வேண்டாம்
வாழ்க்கைச் சிக்கலுக்குள் இருந்து
என்னை விடுவித்து பறக்கின்றேன் பறக்கின்றேன்
தொலைதூர பயணமாய்..
கவலை மறந்து கட்டுப்பாடுகள் இன்றி
இயற்கையின் சுகந்தம் நுகர்ந்து பருகி
பறந்தேன் என ஓர் ஆனந்தம்

■ கவிஞர்.ந.ப.காங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ! என்ன சத்தம் அது
நிலவுகூட என்னை கைதட்டி அழைக்கிறதோ?
இல்லை இல்லவேயில்லை
விடியலின் அலாரம் நிதர்சனம் உணர்த்த
விழிக்கின்றேன் என் சிறகுகளைக் காணோம்
அழகான பசுமை வெறும் கனவுகளில் மட்டுமா
மாசடைந்த உலகும் அழுக்கடைந்த மனங்களும்
மறையும் காலம் மாறும் காலம் வருமா?
கேள்வியை மனது கேட்டுக்கொண்டாலும்
கால்கள் வாழ்க்கைப் போராட்டத்தை தொடர
பயணிக்கிறது தன்னிச்சையாய்

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மை

தொண்டைக் குழியிறங்க மறுக்கும் உணவு
தலைசுற்றி மயக்கம் போட்டு
உடல் அசைவு வலியெடுத்து
எத்தனை வலி சுமந்து
பத்து மாதம் பவித்திரமாய்ப் பேணிக்காத்து
உயிர்ப்பிறப்பின் அந்த ஒரு நொடியில்
இது வரம் அல்ல பெண்ணின்
சாபம் என மனம் பேதலிக்கும் அதே கணம்
ஜனித்துவிட்ட உயிர்ப்பிறப்பின்
சின்னக் குரல்கேட்டு அதன்
முகம் பார்த்த நொடிப்பொழுதில்
எல்லாம் புரியும் பெண்ணின்
மகத்துவமும் அவள் பெற்றுக் கொண்ட
வரத்தின் மகிமையும்
தாய்மையின் வலிமையும் கருணையும்
இவ்வுலகில் உண்டோ எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகரீக மாயை

உங்களுக்கு என்ன தெரியும்
நாங்கள் எல்லாம் நாகரிக மங்கையர்கள்
நவீன யுகத்தில் வாழும்
நாலும் தெரிந்த நங்கையர்கள்
பதினாலு வயதில் பள்ளியிலே
காதல் கொள்வோம் பள்ளிப்
படிப்பு மட்டுமன்றி எதையும் வீணாக
வாசித்தறியோம் தேடியறியோம்

கட்டைப் பாவாடையும் உடல் இறுக்கும்
ரீசேட்டும் போட்டு நண்பர் குழாமுடன்
நன்றாக பழகுவோம் இது எங்கள்
சோசலாக பழகும் நற்பழக்கம்
பேஸ்புக்கில் நுழைந்து மணிக்கணகில்
அரட்டை அடித்து ஸ்மார்ட் போனில்
சாப்பாட்டைத்தவிர எல்லாமே
சடுதியில் பெற்று சந்தோச உலகில் சஞ்சரிப்போம்

நல்வழி காட்டும் எதனையும் நாம்
மதித்தறியோம் மதியுரைகள் கேட்டறியோம்
மனம்போன போக்கில் வாழ ஆசைப்பட்டு
மிதமிஞ்சிப் போன துணிவுகொண்டு
இருபதுக்குள் ஓர் வாழ்க்கை
அமைத்துக்கொண்டு விடியலுக்காய்
காத்திருப்பை தொடர்கதையாக்கி
விசும்பிக்கொண்டே வாழ்வை நகர்த்தும்
விவரம் கெட்ட வனிதையர் கூட்டம் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு என்ன தெரியும்
நாம் நாகரிக மாயையைச் சுற்றும் விட்டில்
பூச்சிகள்
மறைக்க முடியாத உண்மையின் பிம்பங்கள்
இது எங்களின் பிழையா உங்களின் பிழையா?
இல்லை நவீனத்தை தவறாக பயன்படுத்தும்
நம் மனங்களின் பிழையா? சித்திப்போம்
மங்கையரே
சிதறாமல் முடிவெடுப்போம்.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்த்துப் போன பருவம்

எட்டுத் திசையும் எட்டி இடிமுழக்கி
கொட்டிப் பெய் மழையே பெய்
நாற்று எரிந்து நாவும் வறண்டு
தேசம் வதங்குது நேசமில்லையோ எம்மில்
பருவம் பெய்து வெள்ளம் ஓடுமென
கணித்துச் சொன்னதெல்லாம் பொய்த்துப்
போனாலும்
பிந்தியேனும் முந்தி வா மழையே

சோமாலியாவாகி எம்தேகம் வீழுமுன்னே
சோவெனப் பெய்துவிடு
போர்மேகம் கண்டு புண்பட்ட தேசம்
இன்னும் பல இன்னல் தொடர்கதையாகி
தொடரும் சோகம்
கார்மேகம் சூழ்ந்து கருணை கூர்ந்து
பார்மீது வீழாயோ மழையே நீ உன்
நீர்த்தாரை பட்டு நிமிரட்டும் பயிரினங்கள்
இருகரம் கூப்பி வரமாய்க் கேட்கின்றேன்
வந்துவிடு மழையே வந்துவிடு
நல்லார் ஒருவரேனும் நாணிலத்தில்
உள்ளாரெனில் நன்றே பெய்க
அதை இன்றே பெய்க வரட்சியை வரிகளாக்கி
ஏக்கத்தை கவியாக்கி நானுனக்குப்
படைகிக்கின்றேன்
விவசாயி விழிநீருடன் சங்கமிக்க
மழையே நீ ஓடி வாராயோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால மாற்றம்

இந்த இயற்கைக்கு எம்மில் ஏனிந்தச் சீற்றம்
ஆதவன் கதிர்கள் அனலைக் கக்கிட
அங்கமெல்லாம் துவண்டு அல்லலுற
நஞ்சை புஞ்சைகள் வறண்டு தகிக்க
வீசும் காற்றில் வெப்பம் மிதக்க
வாரி வாரி வறட்சியைத் தந்து
தன்கோபம் தீர்த்த கோடை காலம்

மீண்டும் மின்னலைப் பாய்ச்சி இடியால் தாக்கி
மிச்சம் ஏதும் வைச்சிடாமல் வாரிக்
கொட்டித் தீர்த்துப்போகும் மாரி
வெள்ளத்தில் அல்லாடி தெருத் தெருவாய்
குடிபோகும் தினம் வாழ்க்கை
நோயோடும் பாயோடும் நலிவுற்று
நலம்கெட்டு பதைக்கின்ற வாழ்வைப் பரிசளித்து
படகேறிப்போகும் மழைக்காலம்
சுக்குநூறாகிச் சுழற்றி அடித்துச்
சுதந்திரமாய்ப் போகும் அந்தச் சூறாவளிக்கு
இன்னும் கொலைப் பசி மட்டும் குறைந்த பாடில்லை

மீண்டும் கொஞ்சம் திறனேறி வாழ்ந்திட வந்து
குடலுருவிப்போகும் குளிர்காலம்
மாறிமாறி நம்மை நலிவுற்று
ஏறிமிதித்துப் போகும் என்
இயற்கைத் தாயே ஏனிந்த உக்கிரம்
உணர்த்தும் பாடங்கள் பலவிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தக் காலம் இனியும் வருமா

எங்கள் வீட்டிலும் அண்டை வீட்டிலும்
அன்னமுன்னா மரங்கள் நிறைந்து நிற்கும்
ஆங்கு முத்திப் பழுத்த பழம்கொய்து
ஆடிப்பாடி உண்ட ஞாபகம் இனிதே

இலந்தைப்பழச் சீசனில் அதைத் தடியால்
தட்டித்தட்டிப் பொறுக்கி உண்டோம்
அந்த இலந்தை மரத்தில் வந்துநிற்கும்
பொன்வண்டுப் பூச்சி பிடித்து
போத்தலில் அடைத்துத் தீனிபோட்டு
தினம் அழகு பார்த்த ஞாபகம்

எங்கள் ஒழுங்கையின் அருகோடு
வளர்ந்த அந்த மரத்தின் பெயர்
இன்றுகூடத் தெரிந்ததில்லை அன்று
நாம் இட்ட பெயரோ
வைரவர் மரம் அதன்கீழே
கற்களைக் கடவுள்களாய் அலங்கரித்து
நட்டுவைச்சுக் கும்பிட்ட வணக்கத்தலம்
மண்பொங்கல் பொங்கிப்
படைத்து மகிழ்ந்தோம்
அந்தக்குச்சொழுங்கை வழி போகும்
பக்கத்து வீட்டு சைலாக்கா அந்தக்
கோவில்பார்த்து கும்பிடு போட்டே
காரியம் தொடங்குவா, அவவிற்காகவே
அழகாய்ப் பூத்தூவி பூசைகள் செய்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டிப்புல்லும் கெந்திக்கோடும் விளையாடி
அதற்கோர் சட்டமும் எமக்காய்
இயற்றிவைத்தோம்
கடற்கரை மணலில் கரம்கோர்த்து
களித்து மகிழ்ந்த கனாக்காலம்

ரோசாப்பூ பறித்து ஒவ்வோரிதாய்
உரித்து தின்ற இனியசுவை
எக்சோராப் பூப்பறித்து தேன்பருகி
அதன் கறுத்த பழம் சுவைத்தோம்
செவ்வரத்தம் பூ ஆய்ந்து சில
செவ்விதழ்கள் சுவை பார்த்தோம்
நாயுண்ணிப் பழம் பறித்து
நாக்கடிக்க கதறிக்கொண்டோம்
அதன் பலவண்ணப் பூப்பறித்து
புதுக் கோலம் போட்டு மகிழ்ந்தோம்

ஓடி ஓடி விளையாடி ஒரு
நோய்நொடி இன்றி திரிந்திருந்தோம்
இன்னும் எத்தனை இன்ப நினைவுகள்
அந்தக்கால எங்கள் வாழ்வின்
அழகிய பக்கம் புரட்டாமலே
இன்றைய தலைமுறையின்
இறுக்கமான வாழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் உலகம்

அகவையிலே நான்
முப்பதைத்தாண்டிவிட்டேன்
அதனால் முதிர்கன்னி என் பெயராம் நானும்
பட்டாம் பூச்சியாய்ச் சிறகசைத்து திரிந்த
காலமதில்
படையாக நிற்கும் வாலிபக் கூட்டம்
தூதுமேல் தூதுவிட்டுத் தேனீக்களாய்ச் சுற்றும்
காதல்க் கடிதங்கள் தினம் பாட்டுப் பாடிடும்
எதையேனும் என் கருத்தில் கணக்கிட்டுக்
கொண்டதில்லை
பாவி நானும் பண்பாடென்றெண்ணி பாராது
இருந்துவிட்டேன்
பெற்றோரின் மரியாதை போயிடுமே
என்றெண்ணி
காதற் பூவோடு வந்தவனை இதயம் புண்படுத்தி
வீராப்பாய் நகர்ந்து சென்றேன்

இன்னும் எனக்கென்ன குறைச்சல்
வயசு மட்டும் பார்த்துப்போகும் வரன்கள்
ஒருபோதும் எனக்கும் மனசொன்று
இருக்கென்றும்
அதில் பல கனவுகள் மிதக்கென்றும்
புரியாமலே போயினர்
அத்தானோடு தினம்
சண்டையிடும் என் அவசரப் புத்தி அக்காவின்
செல்லக் குழந்தைகளின் செவிலி நான்
அவள் அடித்து விரட்டி ஓயாமல்
குறைசொல்லும் அந்தக்
குழந்தைகளின் பேருலகம் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவூட்டித் தாலாட்டி எழுத்தறிவித்து
இன்னும் அறிவுரை சொல்லும் ஆசானாய்
பகுத்தறிவூட்டும் பண்பாளனாய்

தினம் ஓர்பதவி ஏற்று திகட்டாத பாசம்
திணித்து
என் கரங்களுக்குள் சிறைப்பிடித்து
கண்ணுக்குக் கண்ணாக காத்துடும்
தேவதையானேன்

தேகம் தேடும் மணவாளன் மத்தியில்
எனக்காய் அழகிய வாழ்வை மட்டுமே
யாசிக்கும்
அந்த யாசகன் வரவையெண்ணி
இப்போழுதெல்லாம் என் மனம்
ஏங்கியதில்லை ஏனென்றால்
அவ்வாறு ஒருவன் வரப்போவதுமில்லை

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் வித்தியா பேசுகின்றேன்.

அலரிப்பற்றைக்குள்
அழுது திரிகிறது என் ஆத்மா
எத்தனை முழக்கமிட்டும் இன்னும்
எத்தனை போராட்டங்களும் எனக்காய்
டித்துச் சென்றாலும்
நீசர்களுக்கான நீதி மட்டும்
எப்போது அம்மா நீதி தேவதையே

வெறிபிடித்த கயவர்களின்
கால்களுக்கிடையில் என்
கனவுகள் தொலைந்ததே
வெற்றிக்காய்ப் பயணித்த என் பயணம்
வீணர்களால் வீணடிக்கப்பட்டதுவே
வெறிகொண்டு என் ஆத்மா
அலைகிறது நியாயம் வேண்டி

விசாரணை என்ற போர்வையில்
நீடிக்கலாமா நீசர்களின் ஆயுள்
இன்னும் எதை தேடுகின்றீர்கள்
சாட்சியங்களுக்காய் சுரணையற்றே

ஆவியாகி நீதிமன்றம் தோன்றும்
வலிமை எனக்கிருந்தால்
வந்திருப்பேன் வதம் செய்ய என்றோ?....
விதியாகிப் போகவில்லை என் கதை
வித்தாகி மறைந்தேன் விருட்சமாவேன்

நீதி தேவதையே என் வேண்டுகை இதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரலிச் செடியின் அடியில்
ஆக்ரோசமாய் அமர்ந்திருக்கும் என்
ஆத்மா சாந்தியடைய
ஆணையிடுங்கள் அரக்கர்களின்
ஆயுள் முடித்திடவே இனியும்
என்போன்று வித்தியாக்கள்
மொட்டவிழ்ந்து போகாமல் மலரவிடுங்கள்
அதற்காய் ஒரு சுதந்திரப் பாதை
வழியெடுத்து விடுங்கள்

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இறப்பின் பின்

என் இறப்பின் பின் எந்தப் பாதிப்பும்
இருக்கப்போவதில்லை உனக்கு
ஏனெனில் அதைப் பலகாலமாய்
எதிர்பார்த்தவனாய் நீ..

உன் விருப்புத் தானே என் கடமை
என் இறப்பின் பின் நீ
இன்னுமோர் வாழ்க்கை அமைத்திடலாம்
எனக்கும் உடன்பாடே
மறந்தேனும் எனக்கிழைத்த தவறுகளை
அந்தப் புதுப் பேதைக்கும் இழைக்காதே
இது என் இறுதி ஆசை

சுற்றத்தாரிடம் எனக்கு
புது வாழ்வு எதற்கென்றே
பொய் உரைக்காதே ஏனெனில்
என் நினைவுகளைத் தாங்கி
நீவாழ வேண்டி எந்த
அவசியமும் உனக்கில்லை
அதற்கான தகுதியும் உனக்கில்லை
உயிரோடு இருக்குமென்
உணர்வுகளைச் சாகடித்து

வாழ்வை வீணடித்து என்
ஆசைகளைக் கருக்கி
உயிரையே வெறுக்க வைத்த
உனக்கு எனக்காக
என் நினைவுகளைத் தாங்கி
வாழ அவசியமும் இல்லை.
அதற்கான தகுதியும் உனக்கில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்விழா நாயகி

அலங்கரிக்கப்பட்ட இராஜ கதிரையொன்றில்
கதாநாயகியாக வீற்றிருக்கின்றேன் - இன்று
எனதின் அகவை ஐம்பதின்
பொன்விழாக் கொண்டாட்டம்
பூரிப்பில் உறவுகள்

பட்டுச்சேலை பவுணிலும் நகைகள்
பளபளக்க நான் பார்ப்பதற்கு அழகாயும்....
உறுத்தலாய் ஏக்கமாய் சில கண்கள்
உனக்கென்ன கொடுத்து வைச்சவள் என்றுரைத்தன
அவைமீறியும் பல கண்களில் பரிவும்
பெருமையும் வாழ்த்தும் சேதி சொல்லின

மருத்துவம் படிக்கும் மூத்த மகளும்
உயர்தரம் படிக்கும் சின்ன மகனும்
சொந்தங்கள் கூட்டி சின்னதாய் சிறப்பாய்
திட்டமிட்டு அரங்கேறும் என் பொன்விழாக்
கொண்டாட்டம்

கையிலே தாங்கும் கணவன்
கண்ணைப்போல் காத்திடும் துணைவன்
பணிவும் அறிவும் செழிக்கும்
செல்வங்கள் இரண்டு முத்தாய்ப் பெற்றுவிட்டாள்
வாழ்வின் முழுமையெல்லாம் அடைந்து விட்ட
முதிர்ச்சி
கண்ணியம் கட்டுப்பாடு தாய்மையின் வீரம்
இன்னும் எத்தனையோ என் காதில் படவே
பெருமைக் கதைகள் பேசிக்கொண்டன உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ! ...
என் இல்லற வாழ்வின் இருபத்தைந்து வருடங்களை
கடந்து விட்ட என் வாழ்க்கைப் பயணத்தை
மனக்கண்முன்னே ஓட்டிப் பார்க்கின்றேன்.

கனவும் காதலும் கண்களில் மின்ன
கட்டிக்கொண்ட திருமணப் பந்தம் - அங்கே
இருமனம் ஒன்றிடா ஒருமனமாகிப்போனது
துடிதுடிப்பும் முயற்சியும் இரசனையின் வீச்சும்
உணர்வபூர்மான சிந்தனையும் ஒருங்கிணைத்து
ஒருருவமாய் நான் நிற்க
உழைப்பு உழைப்பென்று எந்த
உணர்வுகளும் இடைபுகா இருப்பாய்
அவர் தனித்துநிற்க இடறிக்கொண்டது
இல்லறவாழ்வு எல்லாம் மனதிற்குள்ளே

சேலை வாங்கவும் சேற்று வேலை பார்க்கினும்
பயணங்கள் போகினும் பராமரிப்புச் செய்யினும்
பணியிடத்து கடமையுடன் வீட்டுப் பணிச்சுமையும்
ஒட்டுமொத்த சுமையாய் என்மீது திணிக்கப்பட்டு
மூச்சுத்திணறி முழி பிதுங்கி
மனச்சுமை கூடி மனம்விட்டு கூறி
தனித்து தனித்து எல்லாம் ஜெயித்து
தடைதாண்டி பிணி தாண்டி இன்று
வெற்றியின் மகளாய்த் தெரியும் நான்
திரும்பிப் பார்க்கின்றேன்
என் கடந்துபோன வாழ்க்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயகோ!
எனக்கான அழகான நினைவுகளோ
அமைதியான தூக்கங்களோ எதுவுமில்லை
சிரிப்பதற்கும் இரசிப்பதற்கும் ஏதுமற்ற
வெற்றுக் காலங்களாய்!!!!!
இன்றைய அழகான தருணங்களைவிட
எஞ்சியது எதுவுமில்லையென்றானது

என் தனிமையின் குமுறல்கள் விடைபெற்றுக்
கொள்கிறது
வெற்றியைக் காட்டும் எனதான வாழ்வும்
ஒவ்வொரு நொடியும் மனத்தால் காயப்பட்டு
ஏக்கத்தால் வருடப்பட்டு தொடர்கதையாகிப்
போன
பெண்களின் வாழ்வியலின் உண்மைத் தரிசனம்
என்றாகிப் போனது

இரும்பு மனைவியென இறுமாப்புக் கொண்டாரோ
இல்லாள் இவளெனவே இழக்காரம் கொண்டாரோ
இவளும் பெண்ணென்றே மறந்து போனாரோ
இதயமே இல்லாத அரக்கியென்றே
இதயத்தில் இடமின்றித் தூக்கிப்போட்டாரோ

எதுவென்று நானறியேன் இன்னும் புரியவில்லை
போராடிப் போராடி காயங்களே மிச்சங்களாகின
இழந்துவிட்ட இளமைக்காலம்
அழிந்துவிட்ட அழகிய கனவு
கனதியான என் மனச்சுமைகளுடே இனியும்
தொடரத்தான் போகின்றது என் பல அகவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுச் சுழிக்குள்ளிருந்து மீண்டுவரும் என்
மூச்சு
அமைதியான எந்தன் சிரிப்பினூடே
அனைத்தையும்
மறைத்து அழகாய்ச் சிரிக்கின்றேன் அங்கே
வாசலில் வரவேற்பாளனாய் என் கணவன்
இன்னும் என் மனத்தை அறியாமலேயே..............

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் பெண்மையோ

அண்ணன் என்ன தங்கை என்ன
அன்னை என்ன தந்தை என்ன
மாமியென்ன மச்சாள் என்ன
தோழியென்ன தோழன் என்ன
எல்லாம் இங்கு ஒன்றுதானே
என்றுசொல்லி ஓலமிடும்
வஞ்சனைகொண்டே நடமாடும்
வனிதையர் பலவுண்டே

சொன்னதை இல்லையென்றும்
சொல்லாததை சொன்னதென்றும்
உண்மையைப் பொய்யாகவும்
பொய்யை உண்மையாகவும்
நேர்மையைத் தூற்றியும்
ஒழுக்கத்தை சீரழித்தும்
பண்பாட்டை மாசுபடுத்தியும்
வீரத்தை திமிராக்கியும்
விவேகத்ததை வேரறுத்தும்
இன்னும் இன்னோரன்ன
இழிசெயல்களில் லயித்தும் போகின்றது
சுரணைகெட்ட சுந்தரிகள் இன்றே

இன்னொருத்தி மணாளனுடன் மானங்கெட்டு
ஊர்சுத்தி
இல்லறத்தை இரண்டாக்கி அற்ப சுகம் தேடித் தேடி
அடுத்தவரை விமர்சித்து உதவியதை உதறிவிட்டு
ஊமையதைக் கதறவிட்டு நல்ல பொண்ணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்தானே
என்கூறி நடமாடும் நாகரீக நங்கையர்கள்
நடமாடும் உலகுண்டு
நம்புவீரோ மாந்தரே அதை
புரிந்து நீரும் விலகுவீரோ

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவள்கள்

எப்போதும் எரிந்துவிழும் பெண்களுக்குள்தான்
இன்னும் கொந்தளித்துக்கொண்டிருக்கும்
மனச்சுமை உள்ளிருக்கும்
எப்போதும் அதிகாரமிட்டும் ஆணையிட்டும்
தலைமை தாங்கும் அவள்களுக்குள்
இன்னும் அடக்க முடியா அன்பும்
வெளிக்காட்டவியலா ஆதங்கமும்
உருகி வழிந்துகொண்டுதானிருக்கும்

எப்போதும் உழைத்து உழைத்து
களைத்துப் போன அவள்களின் வாழ்வில்
இன்னும் நின்மதியான உறக்கத்துக்காய்
கண்கள் தவமிருந்து கொண்டு தானிருக்கும்

எப்போதும் நேர்மையாகவும் உண்மையாகவும்
வாழப்பழகிய அவள்களுக்குத்தான்
இன்னும் அநியாயங்களும் அவதூறுகளும்
கிடைத்துக்கொண்டே தானிருக்கும்

அறிவையும் பண்பாட்டையும் பறைசாற்றி
அவனியில் வலம்வரும் அவள்களுக்குத்தான்
இன்னும் திமிரென்றும் அடங்காப் பிடாரியென்றும்
பெயர்சூட்டி இந்த உலகு
அழகு பார்த்துக்கொண்டு தானிருக்கும்

எப்போதும் சுயமரியாதைக்காய் கோபங்கொண்டு
சுட்டிக்காட்டும் அவள்களுத்தான் இன்னும் இந்த உலகு
தூக்கிப்பிடிப்பவள் என்றும் தூக்கி எறிபவள் என்றும்
குத்திக் குதறி கிழித்துக் கொண்டுதானிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் உடையிலும் நடத்தையிலும்
உறுதிகொண்டு பயணிக்கும் அவள்களைத்தான்
இன்னும் இந்த உலகு மானங்கெட்டவள்
நாகரீகம் தெரியாதவள் என்று
அசிங்கப்படுத்திக்கொண்டுதானிருக்கும்

என்னையும் உன்னையும் சேர்த்து
மொத்தத்தில் அவள்களை அவள்களாக
பயணிக்க விடாமலே
இந்த உலகு வஞ்சகத்தின் நஞ்சருந்தி
உயிரைப்பறித்துக்கொண்டுதானிருக்கும்
இதையே
அவள்களின் வாழ்வியல் விதியாக்கி தம்மை
நீதிபதிகளாக உலகுக்கு காட்டிகொண்டிருக்கும்

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னைத் தேடுகின்றேன்

எனக்காக சபிக்கப்பட்ட இந்த
வாழ்க்கைத் தீயிலிருந்து
எட்டி விழுகின்றேன்
குளிரூட்டப்பட்ட நச்சு வாயுக்கள்
அதிநிரப்பப்பட்ட உறவுக் காட்டிற்குள்
நம்பிக்கை மலர்நீட்டி நடைப்பயணம்
தொடர்கின்றேன்

பொய்யர்களின் பாலைவனத்தைக் கடக்கும்
கனதியான ஆசையில்
வஞ்சத்தையே நறுமணமாய் வீசும்
நந்தவனக் காட்டில் ஒளிந்துகொள்கின்றேன்

பொல்லாப் பழிபோடும் பெரும் புயலுக்குப் பயந்து
பொறாமை நீறுபூத்துத் தகித்திருக்கும்
அமைதிச் சாம்பல் மலைக்குள்
அடைக்கலமாகிப் போகின்றேன்

வேதனைகளின் ஆழிப்பேரலைக்கு அஞ்சி
எனைமீட்கும் கருணைக் கரமென
பாசத்தின் வேடம் தரித்த பிரபஞ்ச
சிக்கலுக்குள் நானே எனைத்தொலைத்து
தொலைந்து போகின்றேன்
மீண்டும் வாழும் ஆசைத்தீயில்
வெந்து உருகி மயங்கிச் சாகின்றேன்
அந்தப் பிரபஞ்சப் பெருவெளியில் தினமும்
என்னைத் தேடித்தொலைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதை

உன் எண்ணக்காட்டில்
நற்சிந்தனைகளை விதை
உன் அன்புப் பெருவெளியில்
தூய்மையான அன்பை விதை
உன் பலமான வாழ்நாளில்
நற்செயல்களை விதை
உன் பணத்தின் பெறுமதியில்
ஏழையின் வயிறு நிறைய விதை
உன் நண்பனின் தோல்வியில்
நானிருப்பேன் என்ற நம்பிக்கையை விதை
உன் நம்பிக்கையின் பாதையிலே
துணிவின் பயணங்களை விதை
உன் பொறாமைத் தீயினிலே
தியாகத்தின் குணத்தை விதை
உன் புரிந்திடா உணர்வுகளில்
என்றும் புத்தியை ஆழமாய் விதை
உன் காலத்தின் ஓட்டத்தில்
கற்றுக்கொண்டே தேடலை விதை
உன் மாறிப்போகும் நவீனத்திலே
என்றும் தமிழ் பண்பாட்டை விதை
உன் தொழில்நுட்ப அறிவினிலும்
தெளிவான வாசிப்பை விதை
உன் வாசிப்பின் ஏதொன்றிலும்
நீ மீளும் வாய்ப்பொன்றை விதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைப்பவைகள் தானே விருட்சங்களாகின்றன
இங்கே களைகளை விலக்கி நல்
விதைகளை விதைப்போம்
பாலைவனமாக்கப்படட் எம்
எண்ணத்திரையிலே நற்
சிந்தனை நீரூற்றி
அன்புப் பசளையிட்டு
அழகிய வாழ்வின்
விதைகளை விதைப்போம்

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி...

வன்னி மண் வடித்தெடுத்த கவிச்சிற்பங்கள் பல. அச்சிற்பங்களுள் உணர்ச்சிப்பிளம்பில் உயிர்பெற்ற புரட்சி மங்கையாகவே காண்கின்றேன் கவிஞர் ந.ப.கங்கா அவர்களை.

உணர்சிகளை வரிகளாக்கி, வடிவம் கொடுத்து, புரட்சியாக்க கனவுகாணும் உள்ளங்களுள் உன்னதமான உள்ளம் கொண்டவர். கங்காயினி எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் ந.ப.கங்கா என கவியுலகில் வலம்வருகின்றார். வாழ்கையில் பல இன்னல்கள் கடந்து இன்று கணவர் பிள்ளைகளுடன் நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக் கின்றார்.

"இலக்கியம் ஓர் காலத்தின் தேடல்". இக் கவிதை நூலைப் பொறுத்தவரை எமது தேடலுக்கு கிடைத்த வெற்றியாகவே காண்கின்றேன். உணர்ச்சி வேகம் கொண்ட இக்கவிநூலை வெளியிடுவதில் எமது மன்றம் பெருமை கொள்கின்றது.

**நாவலூரான் வ.ஜசிந்தன்**

"இலக்கியமே சமுதாய மாற்றத்தின் கருதுகோள்"



**திரு வ.ஜசிந்தன் B.A**
தலைவர்,
நதியோர நாணல்கள் இலக்கிய மன்றம்,
நாவற்காடு, வரணி, இலங்கை.

9 789557 192086
Rs. 300/-
VIJAY PRINTING PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org